உ

திருச்சிற்றம்பலம்

# சிவானந்தமாலை

இஃது

S. அனவரதவிநாயகம் பிள்ளை, M. A., L. T.,

அவர்களால் பரிசோதிக்கப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1910

[Copyright] விலை அணா 4 [Registered.

# பதிப்புரை

சைவ சித்தாந்தத்திற்கு ஆதாரமாயுள்ள மெய்கண்ட சாஸ்திரங்கள் பதினான்கையும் அடுத்து அநேக சாஸ்திரங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் சிறந்தன சிலவே. துகளறு போதம் மிகச் சிறந்தது. அதற்கடுத்த படியில் வைக்கத்தகுவது சிவானந்தமாலை. "சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்" என்னும் வெண்பா சைவப் பிரசங்கிகளால் அடிக்கடி எடுத்துரைக்கப்பட்டு வந்ததாயினும் அது இந்த நூலில் உள்ளதென்று அறிந்தவர் அரிபரினு மரியர். கொலைமறுத்தல் முதலிய நான்கு நூல்களுக்கும் உரைசெய்த திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் சிவானந்தமாலையிலிருந்து அநேக வெண்பாக்களைத் தம் உரைகளில் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். ஒருபாவொருபஃது உபதேச வுரையிலும் சில வெண்பாக்கள் காட்டப்பட்டிருக்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன் எனது நண்பர் ஸ்ரீமான் கோதண்டசாமி பிள்ளையவர்கள் தம்மிடத்திருந்த சாஸ்திரகொத்துக் கையெழுத்துப் பிரதி யொன்றைப் பார்வையிடுமாறு எனக்குக் கொடுத்துதவினர். அவை யனைத்தையும் அச்சிட்டு வெளியிடல் வேண்டுமென்பது அவர்கள் நோக்கம். அப் பிர

தியிலிருந்த நூல்களுட் பெரும்பான்மைய சிற்றம்பலநாடிகள் செய்தனவாயிருந்தமையால் இதையும் அம் மஹான் செய்த நூலென்றே எண்ணிவந்தோம். நாங்கள் அச் சாஸ்திரங்களை வெளியிடு முன்னமே சிற்றம்பல நாடிகள் சாஸ்திரங்களை வேறொருவர் வெளிப்படுத்திவிட்டனர். ஆயினும், சிவானந்த மாலை வெளிவராததனால் அதனை அச்சிடவேண்டு மென்று நிச்சயித்து வேறு பிரதிகள் சம்பாதிக்க முயன்றோம். சிறிது காலம் முயன்றும் முயற்சி பயன் தராமை கண்டு, பிரதி கூடிய வரை சுத்தமா யிருந்ததனாலும், அதனை எனது நண்பர் ஸ்ரீமான் பூவை கலியாண சுந்தர முதலியாரவர்களுக்குக் காட்டியபோது அவர்களும் நூல் நன்றாயிருக்கின்றது அச்சிடல் தகுமென எனக்கு தைரியங் கூறியதனாலும், இந்தப் பரின்ட்டிங் வொர்க்ஸ் என்னும் பெரிய அச்சியந்திரசாலையோடு சம்பந்தப் பட்டிருந்த ஒரு நண்பரிடம் நூலைக் கொடுத்து அச்சிட ஏற்பாடு செய்தேன். இருநூறு வெண்பாக்கள் வரை அச்சில் வந்தும், இடையில் நடந்த குழறுபாடுகளினால் என்னிடத்திருந்த கையெழுத்துப் பிரதியும்போய் நூலும் அச்சாகாமல் ஒழிந்தது. ஆயினும், அந் நண்பர் என்னுடைய பிரதியிலிருந்து பெயர்த்து எழுதிவைத்த சிவானந்தமாலைப் பிரதியொன்று எனக்குக் கிடைத்தது. அரிய பெரிய நூல்களை அச்சிடப்புகுவோர் அதிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டு மென்பதற்காகத் தான் இதை இவ்விடத்துச் சொன்னேன். அதன் பின்

ஸ்ரீமான் கலியாண சுந்தர முதலியாரவர்கள் திருநெல்வேலி வாசியாகிய எனது நண்பர் ஸ்ரீமான் பாலவண்ண முதலியாரவர்களோடு இவ் விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்க, அவர்கள் தம்மிடத்து ஒரு பிரதி யுளதென்று சொல்லி நேரே என்னைவந்து கண்டு தம் பிரதியை விரைவில் அனுப்புவதாகச் சொல்லிச் சொல்லிய வண்ணமே செய்தனர். இரண்டு பிரதிகளையும் வைத்துக்கொண்டு ஸ்ரீமான் கலியாண சுந்தர முதலியாரவர்களும் யானுமாக நூலை ஒருமுறை படித்துப் பரிசோதித்தோம். பரிசோதித்து, அரிய சாஸ்திரங்களைச் சிறிதும் சலிப்பின்றி அச்சிடுவித்துப் பரவச்செய்து புகழும் புண்ணியமும் ஈட்டும் ஸ்ரீமான் சிவசங்கரச்செட்டியாரவர்கள் கையில் கொடுக்க அவர்களும் மிக்க உவப்போடு அச்சிட ஏற்பாடு செய்தனர். இங்குப் பெயராற் கூறிய நாலவர்க்கும் யான் நன்றி கூறக் கடப்பாடுடையேன். என்னிடத்திருந்த கைப்பெயர்த்துப் பிரதியைப் போக்கடிப்பித்த நண்பரும் என் நன்றிக்கு உரியரே. அவர் அவ்வாறு செய்திலராயின் நூல் அச்சிடல் சிறிது காலம் தடைபட்டு வேறு ஒரு பிரதியோடு ஒப்பு நோக்கி அச்சிடல் நேர்ந்திராதல்லவா? இது சிவன் செயலே.

சிவானந்தமாலை சிறந்த சைவசித்தாந்த நூல். அநேக அரிய விஷயங்கள் உவமைகளால் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. வெண்பா நடையும் அசாதாரணமான இனிய நடை.

இவ் வருமையான நூலைச் செய்த மஹான் இன்னாரென் றறிதற்கு ஆதாரம் நமக்குக் கிடையாதது மிகவும் விசனிக்கத் தக்கது. சிவ புராணுதி தோத்திர மஞ்சரியில் ஒழிவிலொடுக்கஞ் செய்த கண்ணுடைய வள்ளலாரே சிவானந்தமாலையும் செய்தவராகக் காட்டப்பட்டது. சிவானந்தமாலை ஆசிரியரும் திருஞானசம்பந்த சுவாமிகளையே தம் குருவாகக் கொண்டுள்ளார். ஆயினும் இருவர் பாஷை நடைக்கும் பெருமபேதம் உள்ளது. அபிப்பிராய பேதங்களும் சில காணப்படுகின்றன. சிற்றம்பல நாடிகள் இதனைச் செய்தாரென்று சொல்லுதற்குமில்லை. அவர் மெய்கண்ட மரபைச் சார்ந்தவர், தம் நூல்களில் அவ் விஷயத்தை தெளிவாகக் காட்டியுளளார்.

ஸ்ரீமான் கோதண்டசாமி பிள்ளையவர்கள் பிரதியைப் பார்த்தெழுதிய பிரதி, ஸ்ரீமான் பால்வண்ண முதலியாரவர்கள் பிரதி, திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் உரை என்றிம் மூன்றிலும் காணப்படும் பாடங்களுக்கு வேறாகப் பாடபேதங்கள் காட்டவும் இல்லை, திருத்தங்கள செய்யவுமில்லை. பாடபேதம் பிழையுளளதென்று எனக்கு நிச்சயமா யிருக்குமிடத்தும் அதற்குப பொருள் காணுவோர் உலகில் இருக்கக்கூடுமென்று அப் பாடபேதத்தை அப்படியே காட்டியிருக்கின்றேன். பொருள விளங்காத விடத்தில் பாடத்தைத் திருத்தச் சிறிதும் முயல வில்லை. ஒன்று, பிறரொருவர்க்குப்

பொருள் விளங்கலாம், அன்றேல் வேறு பிரதி யகப்படுமாயின் கிரமமான பாடம் அகப்படலாம்; ஆயின், திருத்தம் அக்கிரமமாகுமன்றோ? நூலை நன்றாகப் படிப்போர் 13-ம் வெண்பாவும் 119-ம் வெண்பாவும் மீட்டும் வந்துள்ளதைக் காண்பர். அவை ஒரு பிரதியில் ஓரிடத்தும், மற்றொன்றில் மற்றோரிடத்தும் வந்தன வாகலின், அவ்வவ்விடங்களிற் காட்டக் கருதி அச்சுப் பிரதியில் ஈரிடத்தும் பதிப்பித்தேன். 393-ம் வெண்பா முதல் 414-ம் வெண்பா வரையுள்ள 22-வெண்பாக்களும் தத்துவராயர் பாடுதுறையில் இருபத்தொன்பதாவது பிரபந்தமாகக் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் பல திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் உரையில் சிவானந்த மாலைச் செய்யுட்களாகக் காட்டப்பட்டன வாகலால், அவற்றை நீக்கி அச்சிடக்கூடாதாயிற்று. எனக்கு அகப்பட்ட இரண்டு பிரதிகளிலும் அவையனைத்தும் காணப்படுகின்றன.

இவ்வச்சுப் பிரதியை வாசிக்கும் அன்பர்கள் தம்மிடத்து வேறு கையெழுத்துப் பிரதியிருந்து அதனை எனக்கு அனுப்பின், அடுத்த பதிப்பை அதனையும் வைத்துப் பரிசோதித்து வெளியிடுவேன். அவர்களுக்கு வேறு திருத்தங்கள் தோன்றுமாயினும், அவற்றை எனக்குத் தெரிவிப்பராயின் நூலை அடுத்த பதிப்பிற்கு ஆராய்ச்சி செய்தற்கு அவை உபகாரமாகலாம்.

S. அனவரத விநாயகம் பிள்ளை.

உ

திருச்சிற்றம்பலம்.

# சிவானந்தமாலை.

## கடவுள் வாழ்த்து.

பீடுதருங் காளத்தி பேணுங் கடகளிறே
தேடுமிடம் வாடுமிடஞ் செல்லுமிட—நீடுபகற்
றுஞ்சநதி யானேனுந தோன்றாத முத்திபெற
வஞ்சந்தி யானே யருள். (௧)

சுட்டியமீதோர் செங்கையுஞ் சுட்டாத செங்கையினில்
வட்டி னிறைந்து வழிபாலுங்—கட்டியதோர்
சேலையுடன் சீராவுஞ் செம்பொற் றிருத்தண்டைக்
காலையுமென் கண்குளிரக் காண். (௨)

சும்மா விருப்பவர்பாற் றோன்றுஞ் சுடரொளியைப்
பெம்மா னிவனென்ற பேராளா—வம்மை
முலையுண் டழுத * முதல்வா பிறப்பி
லலையுண் டலைந்தே னற. (௩)

ஈச னிருவிரலாற் காட்டவொண்ணு வின்பத்தை
மாசறவோ ரங்குலியால் வாழ்வித்த—நேசமிகுந்
தொண்டர்க்கா கும்பதத்தன் றோணிபுரத் தோன்றலருட்
டண்டைக்கா லென்றன் சரண். (௪)

* முனிவா - பாடபேதம்,

நேயத்தே நின்றபடி நில்லாம லின்றளவு
மாயத்தே நின்று மயங்கினேன்—காயப்
பவமென்று தீரும் பராபரனைப் பெம்மா
னிவனென் றவனே யினி. (௫)

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகனு—முற்கோலி
வந்திலரே னீறெங்கே மாமறைநூ லெங்கே
யெந்தைபிரா னஞ்செழுத்தெங் கே. (௬)

ஏதமுறு மும்மலங்க ளில்லா வினைவிளைத்த
வாதனைகாள் போநீர் மயங்காமற்—பாதமலர்
சேர்த்தானென் சென்னிமிசை தீரவெனைத் தானாகப்
பார்த்தானஞ் சைக்களத்தப் பன். (௭)

நீயிருக்க வென்னறிவி னான்பட்ட நிட்டூரந்
தீயிருக்குங் கையாயென் செப்புகேன்—போயகலப்
பாவனைசெய் வார்க்கரிய பாதா சிவாயசிவ
தீவினையி லேயறநொந் தேன். (௮)

வேறுபடாப் பேரின்ப வெள்ளத் தழுந்தியருட்
பேறுபெற யான்முயன்ற பித்தேதோ—மாறற்றோற்
கண்மைப பயனான வத்துவிதா னந்தாவென்
னுண்மைப் பயனை யுரை. (௯)

மன்றுணடங் கொண்டசிவன் மாதுமைகண் டுள்ளுருக
நின்றுநடஞ் செய்யுமது நீதியா—மென்று
மருந்தா விடமருந்து மாரூர ரைப்போ
லிருந்தாடு வாரிங் கிலே. (௧௦)

தன்னுண்மை தானே யனுபவிக்குந் தன்மைபோ
லென்னுண்மை தானாக வின்புற்றான்—புன்னெறியை
வாட்டுமருட் போதர்க்கு வாழ்வாய வாழ்முதலைக்
காட்டியகா ழிக்கற்ப கம். (கக)

மெய்போ லிருப்பதே மேதினியும் வானுலகும்
பொய்போ லிருப்பதே பூரணனே—மெய்போலும்
பொய்போலுந் தோன்றாதுன் பூரணமே பூரணமாச்
செய்போதன் றேறீ சிவம். (கஉ)

கையறியா விந்திரியக் கள்வரெல்லா முள்புகுந்தென் [வின்
மெய்யறிவைக் கொள்ளைகொள்ள விட்டேனே—பொய்யறி
பொய்ப்பாச மேலிடவென் போதத்தி லேபுகுந்து
நிற்பதே தெய்வமே நீ. (கங)

பொய்யுறைப்பின் கேதனத்தை மெய்யாகப் புந்தியிலிட்
டுய்யுநெறி காணா துருவெடுத்தே—னையனே
யெல்லா வுருவுமொரு வார்த்தையிலே யில்லையதாய்ச்
சொல்லாத சொல்விழியாற் சொல். (கச)

* மேனிபுள கார்கைலைக் காழீசா மித்தையுட
னானகல வுன்னையினித் தாராயோ—யானெனதிற்
கூடாத மெய்ப்போதங் கூடக் கொடுவினையேன்
கேடாய போதங் கெட. (கரு)

## நூற்பெயர்.

புன்னூல் பலபிதற்றிப் புத்தகப்பே யாகியருண்
மன்னூ லுணராத மாணாகே—னிந்நூலின்
பேர்சிவா னந்தப பெருகடலுட் பேரமுத
மார்சிவா னந்தமா லை. (கசு)

---

* மேன்மைபுகழார் - பாடபேதம்.

## அவையடக்கம்.

பாசஞ் சிவனை யனுபவிக்கப் பாவிக்கு
நேசந தனக்கு நிகராகுங்—காசினிமே
னன்மார்க்க மொன்றுமிலா நானும் பெரியோர்முன்
சன்மார்க்க நூலுரைத்த றான். (கஎ)

## சரியை.

சரியைகேண் முன்றொகுத்துத் தண்மெழுக்குச் சாத்தி
விரைமலர்கொய் திட்டுவிளக் கிட்டுப்—புரைதீரப்
பாடிப் பணிந்து பரவிப் பலகாலுந்
தேடிக் கசிந்து திரி. (கஅ)

காலைதொழ வன்றைவினைக் * கட்டகலுங் கட்டுச்சி
வேலைதொழ விப்பிறப்பின் வெவ்வினைபோ—மாலையினில்
வந்துசிவ லிங்கத்தை வந்தித்தா லேழ்பிறப்பின்
வெநதுயர மெல்லாம் விடும். (க௯)

## கிரியை.

கிரியைகேள் பூநீருங் கேடிலமு துங்கொண்
டருகுதா பந்தீப மார—விரையநீ
ருள்ளுஞ்சு சுததிசெய்தா வாகித்தோ மஞ்செய்து
கொள்ளஞ் செழுத்தாற் குறி. (௨௦)

நற்குலத்தி லுற்பவித்து நாதனடித் தாமரைப்போ
தாசசனைககுப பேறுபெறு வம்முறைமை—பொற்கலத்தின்
மண்ணிட்டன் மாமணியா ஞய்கடிதல் வானமுதந்
தண்ணிட்டுத் தாள்விளக்க றான். (௨க)

* கட்டறுக்கும் - பாடபேதம்.

## சிவலிங்கதரிசனம்.

ஓங்கார பீட மகாரமுயர் கண்டமேற்
பாங்கா ருகாரம் பயில்பீட—மாங்குண்
மகார மிருவட்ட மன்னுநிலை விந்துப்
பகாதசிவ நாதமெனப் பார். (உ௨)

## யோகம்.

யோகங்கே ளுள்ளம் புலனொடுக்கி யோடிரண்
டாகும் வளியடக்கி யாறேறி—யேகமா
யுள்ளத்தைக் கொண்டுபோ யொன்று மிலாவிடத்தே
யெள்ளப் பதிநீ விரைந்து. (உ௩)

## ஞானம்.

ஞானங்கேள் வேதா கமமுணர்ந்து நன்றாக
வான பதிபசுபா சங்களறிந்—தீனமிலா
நின்மலனை நாடி நினைப்பு மறப்புமிலா
நன்மனமாய் நாளு நனுகு. (உ௪)

தன்குழவிக் கன்பில்லாத் தாய்மாரி தன்பயனு
நன்கரண மாறிடுமோ வன்னலமும்—வன்பாஞ்
சரியைகிரி யாயோகத் தன்மையற்கு முண்மைக்
குரியவற்கு மொப்பென் றுணர். (உ௫)

மெய்ஞ்ஞான மில்லாத பாதத்தில் விட்டகுறை
மெய்ஞ்ஞானம் விட்டகுறை தான்விளம்பி—லெஞ்ஞான்றும்
பொற்புடைய பூமிக்கீழ்ப் * போயடையு மட்படையுங்
கற்படையும் போலவே காண். (உ௬)

---

* போயழியு - பாடபேதம்.

## ஞானபாத விசிட்டம்.

யானறியா முத்திநல மெட்டரிதாய் மீளினுமெய்ஞ்
ஞானமய வேதகமே நானறிவன்—கானமுயல்
கால்பிழைத்த லாகாமே யெய்கணையிற் கற்றுணர்ந்தீர்
* தோல்பிழைத்த வேலுமேபோ லும். (உஎ)

## தத்துவமுறைமை.

காலநியதி கலைமூன்றுஞ் சுத்தவித்தை
யேலமருஞ் சுத்த விராகத்தைக்—கோலியே
யீசர் செலுத்துவார் மாயைக்கு நல்லசிவ
மாய்புருடன் சாதாக் கியம். (உஅ)

சுத்தஞ் சிவமிரண்டுந் தோன்றியிடு ஞானத்திற்
சத்திசா தாக்கியமுஞ் சார்கிரியை—யிச்சைதரு
மீசர்தமை யிம்மூன்று மெண்ணுபரை யிப்பரைக்கிங்
காசிலரு ணற்சிவமே யாம். (உகூ)

## தத்துவசுத்தி.

விரிந்தசுத் தங்கடந்து மேற்சுத்தா சுத்தந்
தெரிந்துமிகு சுத்த வதீதத்—திருந்த
பொருளன்றி வேறொன்றைப் போற்றுவா ருண்மை
யிருவன்றி யேநின்ற தில். (௩0)

## கீழாலவத்தை.

சாக்கிரத்தே நிற்பதுவும் போவதுவுஞ் சாற்றக்கேள்
வாக்கு வசனாதி வாயுக்கள்—நீக்குங்
கலாதியுடன் மண்ணாதி வித்தாதி காணென்
றிலாதவான் சொன்னா னெனக்கு. (௩க)

---

* தோல் - யானை. [குறள்-772].

நின்ற விருபதுக்கு நாம நிகழ்த்தியிடின்
வன்றிறன்ஞா னேந்திரியம் வாக்காதி—யொன்றியிடுஞ்
சத்தாதி யநதக் கரணங்கள் சார்புருட
னொத்தா னுயி ருடனே யுற்று. (கஉ)

## மேலாலவத்தை.

மூலமுட னுபியித யங்கண்ட முன்னெற்றிப்
பாலதினிற் சூங்கருவி தான்பார்க்கிற்—காலவைக
ளொன்றென்றே டொன்றுமிரு பத்திரண்டு பத்துமுயிர்
தன்றனதீ தாதியவத் தை. (கங)

ஒன்றிலதீ தந்தெரியு மோரிரண்டிற் றுன்றுரிய
நின்றதொரு மூன்றி னிகழ்சுழுத்தி—யொன்றாக
நாலிலறி யுங்கனவை நாடைந்திற் சாக்கிரமைம்
பாலவத்தை காணும் படி. (கச)

## மத்தியாலவத்தை.

போதந் தனக்குப் பொருந்து மிடையவத்தை
யேதென்ற மாறு வியம்பக்கேள்—யாதொன்றை
நோக்கி மறந்தறியு நண்மையினி னீபடுதல்
சாக்கிர தலைநதவத்தை தான். (கரு)

## நின்மலாவத்தை.

தற்காண்டல் சாக்கிரமாந் தற்பரையே சொப்பனமாந்
தற்காணு வெற்றிவெறுந் தற்பரையே—நற்சுழுத்தி
ஞானந் தந்துரிய ஞானசுக பூரணதே
தானாக வுண்மையதீ தம. (கசு)

## கேவல சகல சுத்தம்.

ஒன்றுமற நின்றவிருள் கேவலமா முற்றசடந்
துன்று முருச்சகலஞ் சுத்தங்கேள்—பொன்றநினை
தானத் தொழிலுரையா லுற்ற விருவினைகள்
தானொத்தல் சத்திநிபா தம். (௩௭)

## வாக்குநாலு.

நல்லுணர்வ ருள்ளொளியாய் நாதமாஞ் சூக்குமைதான்
சொல்லுமயி லண்டசலஞ் சூக்மாதி—மல்கியிடும்
பைசந்தி மத்திமைகாற் பான்மருவி வன்னமதாம்
வைகரிகேட் குஞ்செவியில் வந்து. (௩௮)

## நாலுவகைச் சத்திநிபாதம்.

பேசும் பரிமேத யாகம் பிரமகத்தி
யாசறவோர் காலத் தணைந்ததற்பின்—றேசார்
நியதி கலைமுதலாய் நேர்நிறுத்தல் கன்மப
பயன்விளையா தொத்தவிடம் பார். (௩௯)

நாலுவகைச் சத்திநி பாதத்தி னற்பருவ
மூல குருவே மொழியெனக்குக்—கோல
வரம்பைத்தண் டொண்பச்சைக் காட்ட முலர்காட்ட
நிரம்புகரி நேராய் நினை. (௪0)

திண்ணியகற் பாவை யிரும்பிற் செறிபாவை
பண்ணுமரப் பாவை பச்சைமண்ணுற்—பண்ணியதோர்
பாவையரக் குப்பாவை பாமெழுய்த் தெடுத்தவெண்ணெய்ப்
பாவையிவை போற்பருவம் பார். (௪௧)

மந்ததர மெய்யாதி பொய்தோன்றல் மந்தங்கே
ளந்தமிலா வச்ச மவையறுத்தல்—பந்தமிகு
தீவ்ரங்கேண் மெய்ஞ்ஞான முன்னிரண்டுந் தீர்த்தெழுந்த
தீவ்ரதர மெய்விளைவாய்த் தேர். (௪௨)

## சத்திநிபாத விசிட்டம்.

தானாகி நின்றவுட னல்லா தாகிவிடும்
வானாடும் வையமும்பொய் வையமதாம்—ஞானமயற்
கிட்டமதா யெப்பொழுது மெல்லையற வெல்லையினை
விட்டதுவே வீடாய் விடும். (௪௩)

கூலிப் பிணஞ்சுமப்போர் கூடும் பிணக்காட்டி
லேலக் கொடுபோ யிடவிரும்பிச்—சாலவிகழ்ந்
தேகுமா போலுணர்ந்தோ ரீசனாய் நிற்பதல்லா
லாகமாய் நில்லா ரவர். (௪௪)

ஈறுமுத லில்லாப்பே ரின்பமே யாவதல்லாற்
சோறுதின்னுங் காலந் தொலையாதோ—* கூறுமுறைக்
கெட்டா வகண்டபரி பூரணனே யாவையினுந்
தட்டாப்பே ரானந்தந் தா. (௪௫)

ஆனாத பேரின்ப மாகியே நிற்பதல்லா
லூனாகி நின்றிடுநா ளோயாதோ—தானாகாச்
சிற்குணனே சின்மயனே சிற்பரனே தேசிகனே
நிர்க்குணனே யானந்த னே. (௪௬)

கொண்டாட்டு மிந்திரியக் கூட்டத் தெனைமறந்த
திண்டாட்ட நாளொருநாட் டீரேனோ—வண்டரெல்லாந்
தேடிவாய் செம்பொன்னி னம்பலத்தே தித்தியென
வாடுவாய் நீயே யருள். (௪௭)

---

* கூறுமறை - பாடபேதம்.

நண்ணுங் கருவியெல்லா நானாகா தொன்றொன்றா
யெண்ணியவை நானல்ல வென்னேனை — யொண்ணுதலோ
டின்னருளா மன்றின்க ணின்றாடு மென்றுணையே
நின்னருளால் வேறாகி நின்று. (௪௮)

## பொய்க் குரு.

சேமலிப்பா றித்தித்தல் மின்மினிபிற் றீக்காய்தல்
காம ரிமவேலைக் கலஞ்செலுத்த — ல'மைமயிர்ப்
போர்வையினாற் கூதலறப் போர்த்திடுதல் பொய்க்குருவின்
பார்வையினா லாய பயன. (௪௯)

வாளா மருட்போத மன்றிமலப் போதத்தாற்
கோளார் கருவியெல்லாங் கூறுசெய்தல் — கேளாய்
குருட்டரிப்பன் மண்ணையெல்லாங் கூறுசெய்து பொன்னை
யரித்தெடுப்ப னாமாகி லாம். (௫௦)

தற்போத மில்குரவர் சார்ந்தவர்க்குச் சங்கையறச்
சிற்போதங் காட்டித் தெளிவுசெய்தல் — முற்செவிடாம்
வாக்கிலிதன் வாய்திறந்து வாட்டமறச் செவ்வழிதா
னோக்கிலிக்குக் கூறுதன்மா னும்.
(௫௧)

## மெய்க் குரு.

சின்மயனார் நம்போற் றிருமேனி கொண்டவரு
ளென்மனதா லிங்ங ளியம்பக்கே — ணன்மகன்றன்
மேவு கிணறுபுக மெய்யான நேயத்தாற்
கூவலில்வீழ் தாய்போற் குறி. (௫௨)

வாராது வந்திலனே லென்று மலநசிப்புந்
தாராத மெய்யருளுந் தற்பரையாம் — பேராத
சத்தியுந்தா னற்றநிலை தன்னிறைவுந் தன்னிறைவின்
முத்தியும்பே ரானந்த மும். (௫௩)

பூணுமழ கார்களிகூர் போகத்தில் வீழ்ந்தவன்
காணுமள வும்படியுங் காட்சிபோன்—மாணுநீ
யுள்ளபடி யாமளவு மீசனுருக் கைவிடே
னுள்ளபடி சொன்னே னுணர். (௫௪)

## பரமகுரு தரிசனம்.

அஞ்சு விரலாய்க் குதியா யகம்புறமாய்
விஞ்சுநக மாய்ச்சிவந்து மெல்லியிரா—நெஞ்சா
துலைமீது வெண்ணெய்போ லுளளுருககு மென்றன்
றலைமீது வைத்தசிவன் றாள். (௫௫)

உச்சியாய் மென்றசையா யோடாகித் தோலாய்நா
யிச்சியா வெண்டலையா யீர்மயிர்பேன்—மொய்ச்சிரா
வாள்வைத்த கண்ணி மணவாளன் மன்றினிடைத்
தாள்வைத்த வென்றன் றலை. (௫௬)

ஆக்குநக வங்குலிக ளாந்தா யகம்புறமாய்
மீக்கொளிறை யாய்ச்சிவந்து மெல்லியிரா—தீக்கண்
புரமீதில் வைத்தசிவன் பொய்யறவென் புன்செங்
கரமீதில் வைத்த கரம். (௫௭)

கண்ணு யிமையாய்க் கருமணியாய்க் கண்மணியி
னுண்ணுடி பாவையுமா யுன்னரிதாங்—கண்ணுதலோ
னாட்சிவிடா மும்மல மற்றுவிழ வுளளிருளாங்
காட்சியற வெற்பார்தத கண். (௫௮)

வளையாய் முருந்தாகி மாறுக் குறும்பித்
துளையாகித் தோறசையுந் தன்னு—முளையாம
னேசித்து வந்தமூதன் நின்மலமாந் தன்னையுப
தேசித்த வென்றன் செவி. (௫௯)

வாக்கா யிரண்டிதழாய் வாயா யெபிருகி
நாக்காகி யண்ணமுட னண்ணுமென்—பாக்கியத்தா
லீனமாஞ் சென்மமற வெம்முதல்வந் தெற்களித்த
ஞானமா மோனவச நம். (௬0)

## குருவின் பெருமை.

முத்திபெற வந்தவமே போயழியு மூர்க்கருட
னெத்தனையு நீயணுகா தென்மனமே—முத்தி
விருப்புற்ற தேசிகன்றன் மேனியின்மேற் சுட்டல்
கருப்புத்தே றற்கலத்தல் காண். (௬௧)

மந்திரப்பேய் புத்தகப்பேய் வாசனைப்பேய் பூசனைப்பேய்
தந்திரப்பேய் பாவகப்பேய் தர்க்கப்பேய்—சிந்தையினின்
றூர்த்தவிர தப்பே யனைத்துமொரு வார்த்தையிலே
தீர்த்தவனே மெய்த்தே சிகன். (௬௨)

## சீடன் முறைமை.

பரம * னிவனென்றும் பராபரன்று னென்று
மரிய குருவை யணுகிப்—புரைதீர
வல்லும் பகலு மகலா தவன்முன்பின்
செல்லுமவ னேசீட னும். (௬௩)

கண்டா லழல்வீசுங் காட்டில் வழிபிழைத்துத்
திண்டாடிக் கோடைத் தெருமந்தார்—முண்டகஞ்சேர்
சீதப் புனலோடை சேர்ந்ததெனச் சேர்ந்தேனுன்
பாதத்தே தேசிகவப் பா. (௬௪)

---

* சிவ - பாடபேதம்.

யாவர்க்கு மிந்திரிய மைந்தா மெழிற்குருவுக்
கோவற்ற விந்திரிய மோராறு—மேவியநற்
சீடனுட னிந்திரிய மாறுளதாந் தேசிகனைக்
கூடுகர ணம்போற் குறி. (சுரு)

## கலாசோதனை.

விடுதி நிலையறிவு மேவீடு மெய்ம்மை
படுகருவி தோறுமிவை பார்த்திட்—டுடையொழியா
வஞ்சுவகைச் சுத்தியறிந் தாங்கவற்றிற் காரியமாம்
பஞ்சகலை விட்டுணநீ பார். (சுசு)

## தீக்ஷாமுறைமை.

ஞானமுத னன்குந் தெளிந்துகய மீனுமை
யான பறவை யருளுவபோ—லூனமிலா
நோக்கி னினைவிற் பரிசத்தி னுண்பொருட்க
ளாக்குமுவ னதிகுரு வாம். (சுஎ)

மும்மலத்தின் மூலமலம் விஞ்ஞகலர் கன்மமுட
னம்மலமுற் றார்பிரள யாகலர்கண்—மும்மலமுஞ்
சேர்ந்தார் சகல ரவர்க்குத் திருவுருவா
யோர்ந்தே விழித்துரைப்ப னுற்று. (சுஅ)

விஞ்ஞகலர்க் குள்ளே விளக்கொளியாய் நின்றொளிர்வன்
மைஞ்ஞவிலு மாணவகன் மர்க்கருளாற்—பிஞ்ஞகனே
தெய்விகமாய் வந்தளிப்பன் சேர்ந்தசக லர்க்கவர்போ
லவ்வுருவாய் வந்தளிப்ப னங்கு. (சுகூ)

காணவொணு வாணவத்தை மாயைமுதற் கன்மத்தை
மாணகுரு மாய்க்கும் வகைவகுக்கிற்—பாணியின்மீ
னமை பறவையெனப் பார்த்து மகத்துவைத்துந்
தாமரைக்கை யாற்பரிசித் தும். (எ0)

தன்னிறைவின் மெய்புகலத் தான்சமைந்து தாபதர்கா[ருவை
ளொன்னுரைசெய் தானிறையென் றென்னுரைக்கே-னொன்று
மொக்கவுருக் கொண்டிங் குருவுடையோர் போலுருவிற்
புக்கிறைவன் சொன்னதெல்லாம் பொய். (எக)

பருந்துவிடந் தான்குறிக்கப் பாராதே பார்க்கும்
பருந்தினுக்கே யன்றிவிடம் பாரு—மருந்திட்
டருள்பாரு ருள்ளிருந்து மாறாத சென்மங்
குருபாரூர் பார்க்கவே போம். (எஉ)

## மும்மல தரிசனம்.

மாயை விழிப்படல மாணவமா மற்றிந்தச்
சேய வுலகந் தெளியாமற்—றீய
குழிவழிகண் மாறியதிற கொட்புறுதல் கன்ம
மழிவற்ற சோதியறி வாம். (எங)

## ஆணவம்.

ஆணவமே யுன்னை யறியாமை யென்றறிந்தே
னாணவமே யுன்பா லறிவின்மை—காணிலொரு
சற்றுமிலை போதமெனிற் றானுமிலை தானறவே
நிற்றலினு ணணுகு நீ. (எச)

நீயுஞ் சிறிதுபொழு தாணவமாய் நின்றுபா
ராயமன்று னின்றாடு மாண்டவையே—யோயாம
லைம்புலனு யாடிப்பா ரானந்தத் தாண்டவம்விட்
டெம்பிறவித் துன்பறிய வின்று. (எரு)

மாலிட் டெனைமறைத்து மாறும லின்றளவு
மேலிட்ட கங்குல் விடியாதோ—நாலெட்ட
வொண்ணாத வீசா வுபாகருயிராய் நின்றாலு
நண்ணாத சோதி நவில. (எசு)

சாதத்தின் வேரராய்த் தமோமயமா மூலமலம்
பூதப் புனலாடப் போமோதான்—போதத்தி
லானசிதா காசத்தா மானந்த வெள்ளத்தே
தானறிந் ரூடுதறீர்த் தம். (எஎ)

சோரரா தென்னைவிழுங்கித் தோன்றுத வாணவமே
நேராக நானெங்கே நீயெங்கே—தீராத
வூனந் தனக்கடியா முன்னைபபோ லென்னைப்பே
ரானந்த மேலிட்ட வன்று. (எஅ)

அந்தமிலா வாணவமே யன்றுமுத லின்றளவும்
வந்த வுறவை மறநதோடே—யெந்தையரு
ளாராத வானந்தத் தந்ததே யெஞ்ஞான்றும்
வாராத முத்தி வர. (எகூ)

கண்ணாடி * தன்னுறுப்பிற் காட்டியதாந் தற்போதங்
கண்ணாக மெய்ப்பொருளைக் காணநினைந்—தெண்ணிலிநூ
லுள்ளிட்ட மாமறையா லாகமத்தா லொண்பொருளைச்
சளளிட் டிழக்குமது தான. (அ0)

தற்போதம் வாழ்கையிலே தற்பரத்தைக் காணுதற்குச்
சிற்போத மானவர்போற் செய்வதேன்—முற்போத
மம்மரிலே கட்டுண்ட மாசற்ற காட்சிபெறு
மும்மலத்திற் றிண்டாட்ட மோ. (அக)

மாயை.

பொய்யா நிலைதனுவாம் பொய்ப்போத மேகாணம்
பொய்யுறவே நிற்ற லதுபுவன—மெய்யாமன்
பாரு மிதமகிதம் வாழ்போக மித்தனையு
மாரு மிதமகித வாழ்வு. (அஉ)

---

* தன்னிருப்பிற் - பாடபேதம்.

ஐபிறைக்குந் தோற்குடிலை யாசைப் பெருங்கடலைப் [பார்
பொய்யுடைறப்பின் கேதனத்தைப் போற்றாதே- * மையிருட்
புல்லாத வானந்த பூரணமே பூரணமா
யெல்லாஞ் சிவமா யிரு. (அங)

பொய்க்குடிலை யைக்கடலைப்பொய்க்கனவைப் பேய்த்தேரை
மொக்குணீர் வீழ்மூத் திரப்பொதியை—மொய்க்குநரிக்
குண்டான நல்விருந்தை யூரும் புழுக்குழுவைத்
திண்டாடி நீயிதென் னாதே. (அச)

கன்மம்.

இருவகையா மான்மிகமிக் காயத்தி னெஞ்சின்
வரும்வகைதா னேதக்கேண் மாணா—பொருவரிய
குன்ம மதிசாரம் வெப்புக் கொடுஞ்சூலை
யன்னபிற வின்னங்கே ளாய். (அரு)

மக்களொடு துட்ட மிருகம்பேய் வன்பசுநற்
பக்கிபறிப் போரசுரர் பற்பலவுந்—தொக்கிலுறல்
சோக மசூயை யபிமான மாற்சரிய
மாகுபல வுள்ளுறுநோ யாம். (அசு)

சீதமுடன் வெம்மை செறிந்து மிகச்சலிக்கும்
வாத மழைதடித்து வானிலிடி—தீதில்
கௌரியொரு பாகன் கருணையினா லாகும்
பௌதிகமீ தென்றே பகர். (அஎ)

கருவா யுதரத்திற் கண்டுண்டன் மண்ணி
லுருவாகி யுற்பவித்த லோங்க—னரைதிரைதான்
மைவிரவஞ் ஞான மரணநர கஞ்சனனந்
தெய்விகமீ தென்றே தெளி. (அஅ)

---

* மையலிருட் - பாடபேதம்.

அப்பாலே யுண்டான பங்கத்தைப் போக்குவதங்
கப்பாலே யன்றி * யா காததுபோ—லெப்பாலுஞ்
சித்தத்தாற் செய்த செயலா மிருவினையச்
சித்தத்தாற் போகை திடம். (அகூ)

பேசும் விலங்குபோ லன்றே பெரிதாய
வாசைவிலங் கின்புதுமை யாரறிவார்—தேசமெலா
முட்டா துழலுமே யிட்டான் முறித்ததனை
விட்டா லிருந்தே விடும். (கூ0)

ஆத்மரூபம்.

நின்றநிலை பேராமை நீபெளரி கொள்ளுவைதா
னின்றநிலை போலே நிமிடத்தி—லொன்றொன்றாய்
வந்தாலும் வாராது போனடிப்பன் மன்றாடு
மெந்தாய்க் கரிதே திதில். (கூக)

காயமெனி லாவியுடன் கண்ணிறொளி யென்றுடனே
தூயவெழுத் தவ்வுடனே தோன்றுபொரு—ளாயுமுறை
தன்னுடனே பண்ணோசை சார்புடனே யீங்கிவைபோன்
மன்னுடனீ யென்றே மதி. (கூ௨)

அறியா வறிவன்றா மஞ்ஞான மன்றாங்
குறியா லறியுங் குறியிற்—சிறிதுங்
குறையா வறிவன்று கோவறிவு மன்று
நிறையா வறிவுகா ணீ. (கூ௩)

எல்லையற வுன்னைச் சதசத்தா மென்றவுரை
வல்லபமன் றுண்மைகேண் மாணவக—சொல்லுங்கால்
வேறேது மில்லைகாண் வீடாத வீட்டின்பப்
பேறே சதசத்தாம் பேர். (கூ௪)

* யரிததுபோ - பாடபேதம்.

மாசிலா மொய்யிருளா மாசிலா மெய்யருளா
மாசிலா தீங்கிவைக ணல்லாய்கேள்—பாசத்
திதுவே யதுவாகு மின்பாதீ தத்து
மதுவே யிதுவா மறி. (௯௫)

## ஆத்மதரிசனம்.

எல்லையறு சத்தன் றசத்தன் றிரண்டறவே
புல்லுசத சத்தன்று போதமல—சொல்லதனாற்
பேசா நெடுநாட் பிராணாகர வெண்ணியதோ
ரீசான மேகா ணிவன். (௯௬)

ஈதல்ல வீதல்ல வென்றென்று சென்றதொரு
போதமது நீயென்று புந்தித்த—போதத்தைச்
சென்றபொரு ளாக்காதே தீர்வு நெகிழாதே
நின்றபடி யேநிறைந்து நில். (௯௭)

எல்லையிடப் பட்டநிலை யெல்லாமு நீகழன்று
செல்லவல்லை யாதலாற் சேதனகேள்—சொல்ல
வரம்பேது மின்றி வளர்கின்ற வென்பூ
னிரம்பாத போதன்காணீ. (௯௮)

எப்பொருளுந் தானாய வின்பபரி பூரணத்து
னிப்பொருளுக் கில்லைநிலை யென்றாலு—மப்பொருளிற்
றற்காண்ட லின்றென்றாய் * தண்டலற்ற தற்பரத்தி
னிற்காண்ட † லேதெல்லா நீ. (௯௯)

நீயற்றா யின்றொழிவு தன்னிலெழு நேயத்திற்
போயற்றா யாகினுநீ போகாய்கா—ணையமற
வெல்லாமாய் நின்றசிவ மின்பபரி பூரணமாய்
நில்லாமை சைதன் னியம். (௧௦௦)

---

* தண்டற்ற - பாடபேதம். † லற்றதெலா - பாடபேதம்.

தான்சென்றான் மேல்வளருஞ் சச்சிதா னந்தத்தி
னான்சென்றா லம்முதற்கு நாசமில்லை — யான்சென்று
புல்லென்றா னில்லாத போதானந் தத்தொன்று
மில்லென்றாற் றானே யிலன். (௧௦௧)

என்குறைத றன்பெருக்கா வெல்லையிலாத் தன்பெருக்கே
யென்குறைத றானா யிரண்டற்றா — லென்குறைத
லெல்லையிலை * தன்னிறைவு மெல்லையிலை யானான
வெல்லையிலை யெல்லாமும் யான். (௧௦௨)

சென்றதல வந்ததல சித்துமல சிற்பரத்தே
நின்றதல வின்பமல நேயமல — வொன்றானுந்
தெள்ள வரிய விவனைச் சிவமுதலுக்
குள்ளபடி யென்றே யுணர். (௧௦௩)

† அத்துவித நன்றருளி லத்துவித நன்றின்ப
வத்துவித நன்றருளி லன்றாகு — முத்தியினி
லண்மைபிரி வற்றவன்றா னானந்தத் தற்சிவத்தி
னுண்மையிவ னென்றே யுணர். (௧௦௪)

சார்வறிவு போதஞ் சகசத்து சிற்றறிவு
பேரறிவென் றின்றிவனைப் பேசாதே — தீர
விவன்செய்தி யொன்றுமிலை யீங்கிவனை யெண்ணிற்
சிவன்செய்தி யென்றே தெளி. (௧௦௫)

வாரா யறிவுடைய மாணா வுனக்குரிய
பேராம் வகைபலவும் பேசினோம் — நேரா
வுவமையெலாம் ‡ பொய்யுற் றொழிந்தவிடத் துன்னைச்
சிவமயமென் றுள்ளே தெளி. (௧௦௬)

---

* தன்னிலை - பாடபேதம். † அத்துவிதன் றன்னருளி - பாடபேதம். ‡ ஓ-வுர் - பாடபேதம்.

ஆளன் றவனன் றிவனன் றறிவன்று
தாளொன்றி நின்றணருஞ் சத்தன்று—மாளாத
சிற்சொருபி யன்று சிவானுபவி யன்றளவி
றற்சிவமுண் டாதலிவன் றான். (க௦௭)

செல்லாமற் சென்றவிடஞ் சீவபரம் போனவிட
மெல்லா மழிய விருந்தவிட—மில்லாமை
நின்றவிட நின்றானு மில்லாமை நின்றபொரு
ளொன்றனுயிர் நின்ற விடம். (க௦௮)

ஈட்டமில்பொய்ப் போதமற விந்திரியந் தோறுமறைத்
தூட்டினவன் மீட்டே யுறுதுணையாய்—கூட்டறவே
யொன்றுசட சாலமெலாம் வேறாக்கி யொன்றுமற
நின்றபொருள் சைதன் னியம். (க௦௯)

ஒன்றுமிலா வொன்றேயுன் னுண்மையினை நீயிழந்திட்
டொன்றுமிலா வொன்றா யுழன்றாயே—வொன்றாக
நின்னுரைக்கி னின்னுரிமை நீயுணராக் கேடதனை
யென்னுரைக்கே னையோகெட் டேன். (கக௦)

பரையழிய வாழும் பரனுயிர்நீ யென்றிட்
டுரையழிய மோன முரைத்தோம்—பரையழிய
வானமுதற் கத்துவித மாக்காதே யவ்வயினீ
போனநிலை மாறாமற் போ. (ககக)

முன்னமல மோகத்தே மூண்டெழுபொய்ப் போதத்தை
யுன்னறிவென் றிங்கா ளுழன்றாயே—நின்னிலைகே
ணீயறியப் பட்டதெலா நீயல்ல வென்றுனது
நேயமுத னீயாகி நில். (ககஉ)

ஏதுநீயா யேதுனதா யேதருந்தி னுயென்னே
யேதுநீ யென்றேயிப் பாடுபட்டா—யீது
மதுபான போதங்காண் மற்றிதனைக் கண்ட
வதுகாணுன் சத்தியபோ தம். (கக௩)

செல்லாதே நில்லாதே சேராதே சாராதே
சொல்லாதே புல்லாதே சுட்டாதே—யெல்லாமு
மாகாதே யானந்தா தீத வகண்டிதமு
நீகா ணதுவே நிலை. (கக௪)

## ஆத்மசுத்தி.

வெய்யோ னணைந்தவிழி வேறற்ற காட்சியல்லால்
வெய்யோன் றொழிலைவிழி மேவிற்றே—வைய
னருளையிவன் பெற்றூலு மைந்தொழிலுண் டாகா
வரியன் சிவத்தோ டுற. (கக௫)

சுட்டற்ற காட்சியினு லன்றிச் சொரூபத்தைக்
கிட்டக் கிடையாது கேட்டியே—வெட்டெனவே
விண்ணிற் கதிரவன்பால் வேறற்ற காட்சியல்லாற்
கண்ணுக்கு முண்டோ கருத்து. (கக௬)

வேறாய விந்திரியம் வேறற்ற நல்லறிவாய்க்
கூறாய வின்பதனிற் கூடியபி—னீறி
லடிமையிவ னுகாம லானந்த மாவ
னடிமையெலா நாயகனே யாம். (ககஎ)

முத்திக் கனியிருக்க முன்னுரைத்த நூன்மொழியாற்
பித்துப் பெருகப் பிதற்றூதே—சித்தமலம்
பேய்போ லகன்றொழியப் பேறற்ற பேருன
நீபோன வின்பத்தே நில். (கக௮)

நின்ற நிலையே நிலையாக வைத்தொருவன் [றுமற
சென்றபொருள் சேர்ந்தபொருள் செல்பொருள்க—ளொான்
றொன்றாகி யேயந்த வொன்றற்ற வொன்றதனி
லின்றாக வைத்தா னெனை. (கககூ)

கண்ட வடிவு சடமே யெனிலதமங்
கண்டழித்துக் காணுமை காறுமது—கொண்டுணரின்
மத்திமமே யந்த வகுப்பொன்றுங் காணுத
துத்தமமா மென்றே யுணர். (கஉ0)

சீலமழிந் தொன்றாய சிற்சுகபோ தங்கழன்று
மேலொடுகீ ழற்றசிவ வேதகத்தை—நூல்பலவாற்
பல்சொல்லா னீடளவைப் பண்பினுற் காட்டலுலர்
புல்லாற்றீச் சுட்டல்போ லும். (கஉக)

மூவலியு மற்றவருண் முத்தாவோர் சத்தியங்கே
ளேவலியா முண்மைப்பே ரின்பமெல்லாஞ்—சீவிதனிற்
சீவியே சீவியெனச் சீவபர மற்றதுவே
பாவியா முத்திப் பயன். (கஉஉ)

நாலாய நற்பதமு நல்ல வவுத்திரியு
மாலாய தந்திரமு மந்திரமு—மேலாய
சிற்போத வுண்மைத் தெரிசனமு மெல்லாமுன்
றற்போத நட்டமெழத் தான். (கஉங)

நீசிவமாய் நின்றபடி நின்றிடவே நீயற்ற
நீசிவமா யெங்கு நிறைந்திடுவை—பாசவிருட்
கேட்டிலே யெப்போதுங் கேடுபடா தானந்த
வீட்டிலே நின்று விடு. (கஉச)

வெண்ணெயுறு பாவையென மெய்யுருக வானந்தக்
கண்ணருவி சோரவுரை கைகழல—வெண்ணமெலா
மற்றசிவ பேரின்ப வானந்த பூரணத்தே
யுற்றசுவ டொன்றுமே லொன்று. (கஉரு)

நாதனிரு பாதத் திருபரவை நாடோறும்
வேத நுவல்பரவை மெய்ப்பொருட்பாற்—போதமற
நின்று லரும்பரவை நீள்பிறப்பி லுன்றனுயி
ரொன்றுமைக் கோர்பரவை யோர். (கஉசா)

## சிவாணுமலசகசம்.

ஆதி யமல னணுமலவ னாயிருக்கு
நீதி குருவே நிகழ்த்தெனக்கிங்—கோதுங்காற்
றர்க்கமற வாதி யணுவுக்குந் தானிரண்டு
நற்கனகஞ் செம்பெனவே நாடு. (கஉஎ)

## ஞானமுறைமை.

ஓயாம லைம்புலன் சேர்வாயி லொடியெறிந்தங்
காயா மனத்தை யலைவறுத்து—மாயாதே
பண்டை யறிவொழிந்து பண்டையறி வாய்ப்பரத்தை
மொண்டமுந்திப் போவதுமுத் தி. (கஉஅ)

கருவிகொடு காணிலது காணும் புலையை
மருவி மறையவன்பால் வந்தா—லருகணைய
வொட்டுவனோ வேறே யொருவ னொருத்தியுறிற்
கிட்டுவரோ மற்றொருவர் கேள். (கஉகு)

ஆடுகுலா லன்றிகிரி யோர்சுற்றுக் காயிரஞ்சுற்
றோடுங் கரணத் துழலாதே—நீடறிவி
லெட்டயிலம் போனின்ற வெந்தையுடன் முந்தாத
நிட்டையிலே நில்லாம னில். (கஙo)

மேவு புறக்கரண முட்கரண மென்மேலுந்
தாவியொரு சற்றுமதிற் றக்காதே—யோவாத
நாத முடிவான நற்பரத்தோ டுற்றவநு
பூதியைநா மென்றுகாண் போம். (கஙக)

## பரைதரிசனம்.

மன்னு பரைக்காட்சி யேதென்ற மாணுகே
ளுன்னுடனே யொன்று யுணர்வாகி—யிந்நெடுநாட்
காணவரி தாகி * மனக் காரிருளே யேவளர்க்கு
மாணவத்தைக் காணுமதே யாம். (கஙஉ)

## சத்திகழறல்.

நன்றுமிரு வேங்கலப்பி னுமிழுந்த நற்சுகம்போ
லென்றுமுமை தன்கலப்பி லின்பாமோ—வொன்றி
† யுருகிச் சுகிக்குமுமை யாமாகி லுன்னைத்
தருகைக் கிசைந்திடுமோ தான். (கஙங)

ஐவகையாஞ் சத்தியைவிட் டானந்தத் தெய்துநிலை
தெய்வநெறித் தேசிகனே செப்பெனக்குத்—தையலைமுன்
பாங்கியர்க ளையகனே டாக்கிப் பணியறவே
நீங்குமது போலே நினை. (கஙச)

## பசுசுத்தியில்லாமை.

எப்பொருளு மாணு லிவன்படுதல் சுத்திசெய்தல் [ன்
செப்பரிய சற்குருவே செப்பெனக்கு—மெய்ப்பொருட்பா
முற்சுத்தி யென்றே மொழிந்திடுவ ரீதன் றுந்
தற்சுத்தி ஞானே தயம். (கஙரு)

---

* மழைக்காரிருளை - பாடபேதம். † யுருகச் சுகியுமையே-பாட பேதம்.

## போத ஒழிவு.

பொய்விளக்கு மின்பபரி பூரணத்தே நின்றொளிரு
மெய்விளக்குச செய்யும் விதிவிரிக்கி—லையமற
வொன்றொருவன் றாண்டி லொளிவீசு மற்றுரைத்த
வொன்றொருவன் றாண்டிலவி யும். (கசசு)

ஒக்க வுயிர்க்குயிரா யோங்குசிவ முள்ளிருக்கப்
பொக்குணர்வி னாலே புறந்தேடல்—சர்க்கரைதே
னுண்டான பாத்திரனை யுட்கையிருக் கப்புறங்கை
கொண்டாடி நக்குவதொக் கும். (கசஎ)

## அடிமைவியப்பு.

நின்மலனீ துன்மலனா னின்னிலடி யேன்மிகவு
நன்மையுடை யேனிதனை நாடிக்கேள—சின்மயனே
யுன்கேடு பாச விருளாகு மொன்றுமிலா
வென்கேடா னந்தமா மே. (கசஅ)

## கதியிரத்தல்.

மாசுமலி பொய்ப்போத மாண்டருளே யெங்குமிக
வீசியது வாய்நிறைந்து வீடாதே—தேசிகனா
யென்போல வந்தகுரு வென்குருவே யென்குருவே
யென்போல வந்தகுரு வே. (கசகூ)

ஆகார மேவினைவித் தாருயிரா யின்றளவும்
போகாத பொய்ப்போதம் போயகல—நீகாதான்
தாடா குருநாதா தாடா குருநாதா
தாடா குருநாதா தாள். (சஉ0)

எய்ப்பதனின் வந்துதவு மின்பத்தா ணீவைத்த [ட்பா
வைப்பொழிய வென்றலைமேல் வையாயோ—மெய்ப்பொரு
ளில்லா நிலையளித்த நின்மலனே நீவகுத்த
தெல்லாமும் பொய்யா யிட. (கசக)

செய்ததெல்லா நீயாகிற் சிந்திப்ப தெப்பொருணன்
செய்ததெல்லா நீயான சின்மயனே—செய்ததெல்லா
நீயா யிரண்டற்ற நின்னிறைவை யென்னுயிர்க்குத்
தாயான தேசிகனே தா. (கசஉ)

ஆகார நித்திரைகா மாதிக்கு *மூலமுதல்
நீகா ணெனதறிவாய் நின்றவனே—யோகாதி
சிந்தனையு நிட்டைகளுஞ் சித்தமல மாக்கியுனைத்
தந்தருளா யென்குருநா தா. (கசங)

பாழ்த்ததே கத்தின்மலப் பாவனையாம் போதத்தாற்
கேட்கப்போந் துன்னைக் கெடுத்தேனே—காட்சியுறு
தெல்லா மழித்தெனக்கு னின்பபரி பூரணத்தைச்
சொல்வாய்நான் கேளாமற் சொல். (கசச)

ஓதப்புக் குன்னப்புக் கொன்றப்புக் குன்னிழந்த
போதத்தை யானென்ற பொய்கெடவுன்—பாதத்தைச்
சாராமற் சார்வறிவு தட்டாம னின்றநிலை
வாராமல் வாராய் வர. (கசரு)

ஒன்றுமற நீயிருந்த வுண்மையென துண்மையதா
லொன்றுமற நீயிருக்க வொண்ணாதோ—வொன்றுமற
நீயிருக்க வொண்ணாத நின்சளப்பா டின்றெனக்குத்
தீயிருக்குங் கண்ணுடையாய் செப்பு. (கசசா)

* மூலதலம் - பாடபேதம்.

நீயெடுத்த கோலமெலா நீயல்ல வென்றிருந்தே
னீயெடுத்த கோல நிலையாக்கி—நேயத்
தனுபூதிக் கப்பாலா மானந்தா தீதந்
தனுவே தனுவாகத் தான். (கஎ)

உன்னருளைத் தந்தெனைநீ யொன்றிடினு மென்போத
மென்னைமிகப் பண்ணுமிதற் கென்செய்கே—னின்னருளோ
வென்போத மோவலிய தேதென் றெனக்கிசைய
வென்போல வந்தா யிசை. (கஅ)

மாயா வுருநிகர்ப்ப மானிடம்போல் வந்தெனக்குத்
* தாயாவி நீயென்ற சற்குருவே—நாயே
னறிந்ததெல்லா நீயா யழிவானே னேனீ
யறிந்தவனு நீயாகை யால். (கசு)

தானுந் தனிமுதலென் றெற்காண நிற்காண
யானுந் தனிமுதலென் றென்னுயிரே—யினமற
நம்மினு நம்மை † யறியும்வகை நல்காயே
லெம்மிலே யுள்ள திருள். (கரு)

யானுந்தா னுந்தான்பொய் யானேதான் றானேநான்
யானுந் தனிமுதலன் றென்போலத்—தானுந்
தனிமுதலன் றென்னொழியத் தன்னுணை தப்பா
இனியெதற்கு நூல்கற்றேன் யான். (கருக)

## சத்திசிவத்துண்மை.

தற்பரமுன் னிற்கத் தடுமாறி யின்றளவும்
பற்றறிவு தற்றொழிலாய்ப் பாழ்த்தேனே—சிற்பரமாய்ப்
பொங்குஞ் சிவானந்த பூரணத்துள் வைத்ததற்பி
னெங்குஞ் சிவமாய யான். (கருஉ)

---

* தாவாவி - பாடபேதம். † யறியுநெறி - பாடபேதம்.

வீடொழியப் பேறில்லை யென்றென்றும் வேதங்க
ளாடியறை யும்பொருளை ஞானகுரு—நீடுமருட்
கண்ணாலே சொன்ன கருணைய பிரான்றனைநா
னெண்ணாதே யுண்டிருப்ப தென். (க௫௩)

கூரிருளை நீங்காமற் கோமானு மெய்தாதுன்
பேரருளைத் தந்தாய்க்கென் பேசுகேன்—சீரொளிசேர்
வெங்குருவா ழண்ணலே விள்ளலிலா மெய்ஞ்ஞான
தங்குருவா மெங்குருநா தா. (க௫௪)

நீடு சிவன்பிரம சாரியென நின்மலையு
* நாடரிய கன்னியென நாட்டுமறை—நேடுங்காற்
குன்றாத வின்பக் குருமணியாற் சென்றழுந்தி
யொன்றானோர்க் கீதுவிளங் கும். (க௫௫)

அங்கமுதல் வந்தேறி யாவையும்விட் டானந்தந்
தங்குசிவ போதவருட் டாபதர்க—ளெங்குஞ்
செறிவின்றி யில்லாளைத் தேசிகனா லன்றி
யறிவென்ற பேரறிவா ரார். (க௫௬)

என்னைப் பணியறுத்திட் டென்னொழிவு தன்னிலே
தன்னைத் தரவல்ல தம்பிரான்—றன்னைப்
பெறுதியிலே பேறறவென் பேறற்ற பேறா
மறுதியிலே யெங்குமா னான். (க௫௭)

கையாகிக் காலாகிக் கண்ணா யெயிறாகி
மெய்யாகி நீயிருந்தான் மெய்யாமோ—வையாகோ
வித்தனைநா ளிப்பொதியை யெப்படியே நீபொறுத்தா
யித்தனையு மாற்றேனி யான். (க௫௮)

* நாடறியக் - பாடபேதம்.

எல்லாநூல் கற்றாலும் யாவு முணர்கினுமென்
பொல்லா நினைவொருநாட் போகாதோ—சொல்லொழியப்
பார்த்தவனே பங்கயப்பொற் பாதமென துச்சியின்மேற்
சேர்த்தவனே தேசிகவேந் தே. (கருகூ)

மையலிலா வாணவஞ்செய் வாதனையால் வந்தெழுந்த
பொய்யறிவை நானென்று போந்தேனே—மெய்யருள்சேர்
* சிற்பரம தேசிகனே தீவினையே னுய்த்தலைமே
னற்பாதந் தாராத நாள். (கசூ0)

கண்டுருகிக் கைதொழுதேன் காதல்விடாய் தீரவுனை
மொண்டுகொளப் போத முயன்றாலுந்—தொண்டிற்
றனிமுதலா முண்மையினிற் றானொழிய நாயேன்
றனிமுதலே சற்குருநா தா. (கசூக)

துன்பமயக் காகியபொய்த் துட்டபந்த நோயதனை
யின்பமெனக் கொண்டிங் கிழந்தேனே—யன்பிலெழுந்
தோவாத மெய்யுணர்வா யுள்ளேநின் றுள்ளுருக்குந்
தாவாவா னந்தந் தனை. (கசூஉ)

## உணர்த்துமுறைமை.

வில்லார் மணிச்சிலம்பில் வேறுபல வானவைவாட்
கல்லாய் மயக்கியிடுங் காலையினி—லெல்லா
மறைப்பொருளான் மாமணியிற் காண்டல்போன் மூன்று
முறைப்பதினா லுண்டிங் குயிர். (கசூங)

---

* சிற்பாவ - பாடபேதம்.

காட்டங் கடைந்தகனல் காச முரித்தவிழி
தோட்டும் * புடவியினிற் றோன்றுபுனல்—கூட்டங்
† சனங்கழித்த பொன்னிவைபோற் காட்டுங் கருவி
யினங்கழித்தா னிற்பெறலா மெண். (கசச)

உற்பவித்த லுண்டாத லோங்கன் மிகவளர்தல்
பிற்குறைத லீதலெனப் பேசியிடுந்—தற்குணங்க
ளாறு முடற்குணங்க ளென்றகற்றி யோதியவிவ்
வாறுமுனக் கன்றென் றறி. (கசரு)

ஊனுறக்க முட்குபத்த நோயுரைத்த லோசையுறல்
காணல் சுவைநாற்றங் கற்பனைக—ணாகந்தை
நில்லாத கோபம்பொய் மெய்சாந்தி நீமுதலா
யெல்லாம் பகுதியோ டே. (கசசா)

வார்த்தையற வோர்வார்த்தை கேட்டியேன் மாணுநிற்
பார்த்தொழியெப் போதுமுனைப் பண்ணுதே—யார்த்தசடக்
கட்டழியா யாகி லுலண்டாகிக் கருவிதொறும்
பட்டதெல்லா மோரோர் பவம். (கசஎ)

வாயைப்புண் ணுக்காதே மாணுநீ யுள்ளளவு
நேயத்தே நிற்கவே நீகேளாய்—மாயா
வுருவத்தே கட்டுண்ட வுன்போதம் போன
பருவத்தே மேலிடுமின் பம். (கசஅ)

எல்லா மிறந்தவிட மேகாந்த மானவிடம்
புல்லாத பேரின்பம் போனவிட—மெல்லையறச்
சொன்னவிட ‡ மேலிவைக ளெல்லாந் துறந்தவிட
மென்னறிவு ¶ நிற்கைக் கிடம். (கசகூ)

---

* புவியதனிற் - பாடபேதம். † கனல்விழித்த - பாடபேதம்.
‡ மேதவைக - பாடபேதம். ¶ நின்ற - பாடபேதம்.

தன்முதலிற் றேசருளிற் றன்னிறைவை யெப்போதும்
பன்முறையாய் நின்று பகுத்துணர்ந்த—நின்மலகேண்
மெய்ப்போத நாடாமல் வீணிலே நான்கண்ட
பொய்ப்போத மேதாகிப் போம். (௧௭௦)

ஏதுதரு மென்னி லிவனன் றிவனருளன்
றாதிபரை யின்பமிறை யன்றாகு—மோதியிடிற்
சிற்பாவ மாணாவுஞ் சென்மக் கிழங்காய
தற்பாவ நட்டந் தரும். (௧௭௧)

பெத்தமுத்தி யுண்டென்று மிக்கோர் * பிரித்துரைப்ப
ரத்தகைமை மித்தைதரு மாய்ந்துணரிற்—சுத்த
மருட்போதர்க் கில்லை மலைவில்லா வுண்மை
யருட்போதர்க் கில்லை யருள். (௧௭௨)

உன்னை யழித்தெழுந்த வுண்மைக்கு நீயார்மற்
றன்னியமி லுண்மை யதற்கதுவா—ரென்னுநிலை
தீரத் தெளிந்து சிவமுத்தி முற்றவிளைந்
தாரைப் பொருளென் றறி. (௧௭௩)

தன்னிற் றனியருளாற் சங்கரனைப் பெற்றாலு
முன்னி லுனை யொன்றவொணா தற்றுக்கே—ளுன்னையுநற்
காலங்க ளெட்டாத கள்வனையு மெண்ணிலிரு
காலம்போ லுன்னிலே காண். (௧௭௪)

கட்டறுமா னந்தக் கரைபுரண்டு மென்மேலு
மட்டறவே நிட்டைவர மாய்ந்துவிடுஞ்—சிட்டாய
தெய்வச் சிவானந்தச் சின்மயமா முண்மையிலே
யைவர்க்குச் சாதவிடும் மை. (௧௭௫)

---

* விரித்துரைப்ப - பாடபேதம்.

தீப்போ லடைந்ததெல்லாஞ் சின்மயத்தே தூளாக [தப்
மாய்ப்போர்க்கு வாய்மை வகுத்துரைக்கேன்—பேய்ப்போ
பொய்யிலெழு மொன்றிரண்டு பொய்யாஞ் சிவனறிய
மையலிலா * மெய்யிரண்டன் மை. (கஎசு)

உன்றன்மை யென்றன்மை யோதக்கேண் மாணவகா
வொன்றொன்று முற்பிற்பா டோதரிதா—நின்றன்மை
சின்மயமே யாமளவிற் றீரமுன்னா மிங்கிதுபோ
னின்மலனா னாவதன்முன் னீ. (கஎஎ)

கெட்டவிரு ளாணவமுங் † கெட்டுப் பரனறிய
நிட்டையுமுன் பால்வந்து நேர்வதிலை—சுட்டறிவு
துஞ்சல் பிறப்புநிலை யற்றசுகா தீதத்திற்
‡ கிஞ்சனுநீ யுண்டா கிலும். (கஎஅ)

## ஞானசதுட்பாதம்.

தன்னுலகு தன்னருகு தன்னைப்போற் றன்னுள்ளே
யென்னுமிகு முத்திபெறற் கேதுவா—மன்னு
சரியைகிரி யாயோகஞ் சன்மார்க்க ஞானந்
தருநிலையி னின்றோர் தமக்கு. (கஎகூ)

தற்கேள்வி நற்சரியை தன்னுண்மை சிந்தித்தல்
பிற்கிரியை தற்றெளிதல் பேசுங்கா—லுற்றசிவ
யோகமா நிட்டையுறன் ஞானமா முண்மையரு
ளாகமாய் நின்றே யறி. (கஅ0)

---

* மெய்யிரண்டின் - பாடபேதம். † கேடுபட நாடறிய - பாடபேதம். ‡ கிஞ்சிலுங் கீ - பாடபேதம்.

## ஞானசதுட்பாதப்பேறு.

ஞானந் திகழ்ந்தறிவை நாடுவதே சாலோகந்
தானும் பரையாதல் சாமீப—மானந்த
போதமே யாகுமது சாரூபம் போதசுகா
தீதமே சாயுச் சியம். (கஅக)

## மனப்பற் றொழிதல்.

வாராய் மனமேயோ ருண்மைகேள் மன்றுடையான்
நீரார் கறைமிடற்றன் காபாலி—யாராத
வாசை யறுவையன் றுடருவா னுகத்தோ
டாசை யறுவையா னல். (கஅஉ)

உன்னுமனந் துஞ்சிடவே யோரைந்துந் துஞ்சிடுங்காண்
மன்னுசிர மோரைந்தும் வாட்டமுறத்—துன்னுகளஞ்
சேதிப்ப மாயுஞ் சினவரவை மானுங்காண்
டீதற்ற மாறு தெளி. (கஅ௩)

* ஆவிதனக் கண்டம் † பகையான வாறுபோற்
பாவிமனச் சுட்டாகிப் பட்டேனே—பாவனையின்
மன்னுனை யென்மொழியில் வாழ்வானை வாழ்விறந்த
வென்னுனை யிநநா ளிழந்து. (கஅச)

உற்றார்போ னின்றே யுசாவியுயிர் கொள்ளுமனப்
பற்றாசை விட்டுனைநான் பற்றேனோ—சுற்றாத
வம்பரா மெய்ஞ்ஞான வம்பரா வானந்த
வம்பரா போதமுதல் வா. (கஅரு)

---

* நாவிதனக் - பாடபேதம். † பகையானற் போன்மனும் - பாடபேதம்.

இன்பத்துக் கோடி யிளைக்குமது போன்மனமே
துன்பத்துக் கோடிச் சுழலாயே—யின்பமுநீ
யப்படியென் றெண்ணியிளைப் * பாறியருட் பேறுபெறு
திப்படிவந் துற்பவிப்ப தேன். (கஅசு)

ஊணு † முறையுநமன் றூதுவர்கா ணுள்ளமே
வாணுதலார் நேரே மறலிகாண்—பேணியிவ
ருற்றார்போல் வந்திடுவர் வந்தாலு மோட்டியர
ணற்று மறைப்பதமே நாடு. (கஅஎ)

ஏதுக்கு நீசமையா யெந்தவுருக் கொண்டுழலா
யேதுக்கு நீபொருந்தா யென்மனமே—பேதைப்
பருவம்போ யுள்ளபடி பார்க்கும்போ துன்ற
னுருவங்காட் டாதே யொழி. (கஅஅ)

காணு நிலைபலவுங் காட்டினோ மாங்கவற்றிற்
பூணுது மாயைப் புலன்வழிபோ—மாணு
வினுஞ்சொல்லக் கேளாய்நீ யெப்போது முன்றன்
மனஞ்சொன்ன தெல்லா மறு. (கஅகூ)

மானதமே தான்முதலாய் வாழ்கின்ற வந்தேறி
யானதெலா நின்னொழிய வாகாதால்—யானென்னும்
பேயென்ற போதே பெருகும் பெருக்கமெலா
நீயென்ற போதே நிலை. (ககூ0)

சித்த விகற்பமது தீராது தீர்ந்தன்று
முத்திபெறு வோமென்னு மூர்க்கருரை—கத்தலைதா
னற்றிருந்த போதுகட லாடுவோ மென்றெண்ணி
யுற்றிருந்த பேதைபோ லும். (ககூக)

---

* பாறியாட் - பாடபேதம். † முடை - பாடபேதம்.

திரையிலா நீர்போலச் சிந்தைநிலா தாயி
* னுரையிலே பேரின்ப முண்டோ—விரியிருள்வாய்
நில்லா விளக்கை விளக்கென்று நீயுரைத்த
சொல்லா விருள்போன தோ. (கஈஉ)

† ஏதுளதென் றெண்ணி யிறுமாந்தா யின்றளவு
மேதருந்தி நீயவமே யின்புற்று—பேதுறீ
கண்டுகளித் துண்மகிழ்ந்தாய் நெஞ்சமே கண்ணுதலோன்
முண்டகத்தா டாராத முன். (கஈஙு)

உன்மத்தங் கொண்டே புலகியற்கை நாடுதலா
லென்மத்தம் போதங்கொண் டேதுவினூற்—கன்மத்
தொலைவிலே தோன்றியிடுஞ் சோதியையுன் போத
மலைவிலே காணு மயல். (கஈச)

ஓரிக்கு நாய்க்குங் கழுகுக்கு மூன்சுமந்து
‡ பாரிற் கிலேசப் படுகின்றீர்—சார்வுகெட
வொன்றிட ருண்மையினி லொன்றுக்கொன் றின்மையிலே
நின்றிடீர் நில்லா நிலை. (கஈரு)

பொய்யறிவு சிற்றறிவு போதம் பெருக்கறிவு
மெய்யறிவு வேறாய் விழித்துணர்ந்தங்—கையறிவு
மோரறிவே யாகவரி னுண்மைபெற ¶ லாமுளமே
யோரறிவு மாகா தொழி. (கஈசா)

நின்னறிவு போனின்ற நிட்டீர போதத்தை
யென்னறிவென் றின்றளவு மெய்த்தாயே—புன்னெறியா
மிவ்வறிவே யாகிற் பிறந்திறவா தென்செய்வா
யவ்வறிவி னீயிலையா னால். (கஈஎ)

---

* னுரையிலாய் - பாடபேதம். † ஏதுனதென - பாடபேதம்.
‡ பாரக் - பாடபேதம். ¶ லாமனமே - பாடபேதம்.

மேவு படிக வரையிற்றன் மெய்ந்நிழலைத்
தாவியொரு நாயாகத் தானெண்ணி—யோவாதே
கத்தித் தலைவெடிக்குங் காட்சிபோற் கத்துவரோ
சித்தத்தை விட்டார் செயல். (கசகூஅ)

வாளாநின் போதத்தான் மாறு கருவிகழித்
தாளாய தற்காட்சி யாமென்னிற்—கேளாய்
குருட்டரிப்பன் மண்ணையெல்லாங் கூறுசெய்து பொன்னை
யரித்தெடுப்ப னுமாகி லாம். (கசகூகூ)

துறவு.

உன்ன * லுரையியற்றல் பார்த்திடுத லொத்தவளம்
பன்ன லிராசியங்கள் பண்ணிடுதல்—† நன்னுதலை
யுற்றிடவே சிந்தித்த லுட்டுணிதல் கூடுதலெட்
டற்றவனே பற்றற்ற வன். (உ00)

காயாதி கக்கினசோ றென்னவே காட்சிவரு
மோயாத தற்பே யொழிந்துவிடு—மாயையெனுஞ்
சார்வுவரிற் கட்செவிவாய் மண்டூகத் தன்மைவருஞ்
சார்வுகெட நின்றோர் தமக்கு. (உ0க)

மேனிபுள கிக்கும் வியர்க்குமே வேட்கையொழிந்
தூனமற வாடகமோ டொப்பாகுந்—தானற்றோற்
குள்ள மலைவொழியு மோவாத வானந்த
வெள்ள மலையும் விழி. (உ0உ)

* லுரைவியத்தல் - பாடபேதம், † மன்னுகலை - பாடபேதம்,

உடம்பு மனைவிமக வுற்றாரோ * டுங்கே
ளடைந்ததனம் வீடடிமை காணி—தொடர்ந்தவினை
யென்னவெனுஞ் சொன்னினைவும் போனு † லிறையருளை
மன்னியவ னைப்பெறுமாண் மா. (உ0௫)

தீரவா மனவேகஞ் சாற்று முரைவேக
நாவாரும் வேக ‡ நடைவேக—மோவாத
துட்டபத்த வேகமெனச் சொல்வேக மித்தனையும்
விட்டகற்றி னலன்றே வீடு. (உ0௬)

தந்ததமர் தாய ருடன்பிறந்தார் தாரமெனும்
பந்தமிகு மைந்தரொடு பல்கிளையுஞ்—சிந்தைசெயி
னுடகஞ்செய் பேரவையு நானிலமேற் சந்தையுமாற்
றேருடமுமென் றுள்ளே யுணர். (உ0௭)

பாசம் பகையாக்க் கண்டார்க்குப் பாசத்தி
னேசந்தான் பின்னை நிலையாது—பாசத்தை
விட்டிலர்கா ணுதலினுன் மெய்ஞ்ஞான முத்தியினுந்
தொட்டிலர்காண் கற்றனர்காண் சொல். (உ0௮)

ஏதே துணர்ந்தாலு மேதே துரைத்தாலு
மேதேது செய்தாலு மென்னுகு—மேதேது
மில்லாத வுண்மையர்பா லெல்லாஞ் சிவமாத
லல்லா லுளதோ வறி. (உ0௯)

சென்றநினை வாலுமினிச் செல்லு நினைவாலு
மொன்றுமுனக் கில்லைபய னுதக்கேள்—நின்றலைக்குஞ்
சிற்றறிவை நீக்கியருட் சின்மயத்தே பற்றுமற்
பற்றுவதே யுற்ற பயன். (உ௧0)

---

* டூர்கே - பாடபேதம். † விறையருளான் - பாடபேதம்.
‡ நடுவேக - பாடபேதம்.

## சீவன்முத்தி.

நின்னறிதல் யானென்ப தற்றுநீ யற்றவுணர்
வென்னறிவென் றன்னை யிழந்தேனே—யென்னறிவில்
வாழ்முதலே யானொழிய வாழாத வல்லபனே
சூழ்முதலே யெங்குநிறைந் தோய். (உ0௯)

என்னை மறந்தடியேன் யானல்லா யானாகி
யின்னெடுநாட் பொய்யி * லிளைத்தேனே—யென்னறிவிற்
போதா வகண்டபரி பூரணனே † போக்களிக்கும்
பாதாவா னந்தரூ பா. (உ௧0)

பொய்ப்போதந் தாக்காத போதமெனக் கெப்போதும்
வைப்பாக நின்றுதிக்கும் வாழ்முதலே—யெப்போது
நீயிருக்க நான்பிறந்த நிட்டூர நீபொறுத்த
லாயிருந்த லேதோ வருள். (உ௧௧)

மன்னு கரண வகுப்பொழித்து மாயையெனுந்
துன்னிருளை யோட்டித் துரந்தறிவை—யன்னியஞ்செய்
வேரைக் களைந்தின்பம் வீசியதே தேசிகன்ற
னாருக்கு மெட்டா வருள். (உ௧உ)

கையறியா விந்திரியக் கள்வரெலா முள்புகுந்தென்
மெய்யறிவைக்கொள்ளைகொள விட்டேனே—பொய்யறிவின்
புற்போத மேலிடவென் போதத்தி லேபுகுந்து
நிற்பதேதா தெய்வமே நீ. (உ௧௩)

* லிழைத்தேனே-பாடபேதம். † போக்கழிக்கும்-பாடபேதம்.

நீயின்மை யெல்லாமு நீயின்மை யாகாம
னீயின்மை யாணவமா நீடுவதே—னீயின்மை
யென்றநிலை யெல்லாமு மின்பநிறை வாயிருக்க
வின்றளவு மாளுவதே யான். (உகச)

இந்திரசா லங்காட்டு மஞ்சனக்கண் ணேடிருந்து
முந்தவுல கங்காண மூளுவதாஞ்—சிந்தனையுஞ்
சிற்றறிவு நீக்கியருட் சேரா துபாதிகொடு
தற்பரத்தைத் தேடுமது தான். (உகரு)

மேலாய மெய்ப்பொருட்கு வித்தாகி நாளொருசாண்
தோலாலே பட்டதுயர் சொல்லுங்கால்—வேலைச்
செறித்தநீப் புண்ணுளன் சிந்தையென நொந்து
குறித்தபோ துள்ளநடுங் கும். (உகசு)

எந்தவுருக் கொண்டிலோ மேதே * தருந்திலோ
மெந்தவுரை பேசி யிறந்திலோஞ்—சிந்தையே
வாய்த்தவருண் மன்றுடையான் மாமலர்த்தாள் வல்வினையே
ளுய்த்தலைமே னல்காத நாள். (உகஎ)

என்றும் பெறுமுதலா மென்னறிவி லின்பமுத்தி
யொன்றும் பெறுமுதலா முன்னிலைமை—யென்ற
னறிவினறி வின்மயனே யப்படிநீ நின்ற
குறியொன்ற நின்னருளாற் கூறு. (உகஅ)

மெத்தவிழி நீர்ததும்ப மெய்முழுதும் விண்டுபுள
கித்துருகு நாளொருநாட் கிட்டாதோ—வத்துவித
வாசாம கோசரமே மன்னுயிரே யென்னுயிர்க்கு
நேசாபோ தாகாச னே. (உகக)

---

* தறிந்திலோ - பாடபேதம்.

என்னிலையே யுன்னிலையா யின்பதனிற் றுன்பதனி
லுன்னிலையே யென்னிலையா யொன்றேனோ—வென்னுகரு
முற்காரி யுண்டுமிழ்த * லுள்ளளவு மோவாதோ
சற்காரி ஞானனந் தா. (உஉ0)

மூடிப்பார் மும்மலமே முன்புபோ லென்னையுநீ
தேடிப்பார் † காணாய் சிவனறிய—வோடிப்போ
வெட்டரிய மெய்ஞ்ஞான வின்பபரி பூரணத்தி
னிட்டையிலே நட்டமா னேன். (உஉக)

நின்ற நிலையே நிலையாக வைத்தொருவன்
சென்றபொரு ணின்றபொரு டேர்ந்தபொரு—ளொன்றுமற
வொன்றாக்கி யேயந்த வொன்றற்ற வொன்றதனி
லின்றாக்கி வைத்தா னெனை. (உஉஉ)

உருவிளைக்கும் பொய்ப்பயிர்க்கு முண்மைப் பயிர்க்கு
மிருபயிர்க்கு நல்ல வெருவாந்—திருவருளின்
முன்கேடு தானடையும் பெத்தத்தின் முத்தியினிற்
றன்கேடு ‡ மென்கேடுந் தான். (உஉங)

என்னுயிரில் வந்திலனே லெங்கே மலவொழிவு [றைவி
மென்னொழிவு மென்னொழிவிற் றன்னொழிவு—மென்னி
லாராத வானந்த வத்துவித சத்தியமுஞ்
சேரா வனுபூதி யும். (உஉச)

ஆக்கைதரும் பொய்யறிவை மெய்யறிவா யவ்வறிவை
நீக்கி யுணராம னின்றேனே—நோக்கமற
வெத்தனையோ காலமெலா மேன்றுபார்த் துண்ணின்ற
மெய்த்துணையே யாரொடுநோ வேன். (உஉரு)

---

* லுன்னளவு மோவாத - பாடபேதம். † காணச்-பாடபேதம்.
‡ மாமிரண்டுந் - பாடபேதம்.

## சிவானந்தப்பேறு.

போதானந் தச்சோறு பொங்கியது மங்கைமீர்
மீதா மடுப்பதனின் மீட்கவொண்ணு—வேதாந்தச்
சொல்லி லடைபிடிக்கச் சுட்டணுகா * வாருமா
னல்லபதத் தேயிறக்க நாம். (உஉசு)

† நம்மையுனக் குண்மை நவிலக்கேண் மாணவகா
வெம்மையினு நின்னை யிடையறவே—மெய்ம்மையினிற்
செல்லாது பம்பரம்போ லாட்டுஞ் சடசால
மெல்லா மிறந்த விடம். (உஉஎ)

இந்தா வெனதுருவ மிப்படிக்கேண் மாணவகா
வந்தேறி யெல்லாம் வகுத்தகற்றி—நந்தாத
ஞானத்து ஞானே தயமான நற்பரத்தி
ஞனற்ற பூரணமே நான். (உஉஅ)

ஒன்றாக ‡ நம்மை யுரைப்பக்கேண் மாணவகா
பொன்றாத பாசமெலாம் பொன்றியபி—னின்றபரை
மீதான வானந்த மேவிடுமே வீடதனி
னீதானு மற்ற நிலை. (உஉகூ)

அன்புடைய மாணு வநுபூதி வாய்க்குநிலை
துன்பமற நானுனக்குச் சொல்லக்கேண்—முன்புநா
னின்மலபோ தத்திலே நின்றதுபோ னீயெனது
நின்மலபோ தத்திலே நில். (உ௩0)

---

* வாகுமா - பாடபேதம். † நன்மை-பாடபோதம். ‡ நன்மை - பாடபேதம்.

நின்செயலற் றெப்போது நம்முடனே நிற்குநிலை
யுன்செயலற் றேதியிட வுற்றுக்கே—ளென்சுவடங்
கொளாறுமற வொன்றாகி யொத்துடனுன் * பந்தத்தி
னின்றதுபோன் முத்திபிலே நில். (உ௩க)

† மன்மறப்பின் மூலமலம் வாழ்கின்ற வாறுபோ
லுன்மறப்பி லானந்த முண்டாகு—நின்மலமா
மேயத்தே நிற்குநிலை நேராக வாணவத்தி
னீயற்ற தன்மைபோ னில். (உ௩உ)

தானெனவொன் றின்றியே தானதுவாய் நிற்பதலாற்
றானவனென் றொன்றிரண்டு தானிகழி—லீனங்கா
ணைப்பனைந்த வப்பேயந் ததுவா யதுவன்றி
மெய்ப்பொருளி னிற்பதுகாண் வீடு. (உ௩௩)

கூடாத வீடுனக்குக் கூடுநெறி கூடாமற்
கேடாய வுற்பவத்திற் கெட்டழியுஞ்—சீடாகேண்
மெய்வந்த வென்போத நின்போதம் போல்விளங்கக்
கைவந்தா லுண்டாங் கதி. (உ௩௪)

நீயெல் லாமறிந்து நீயே யனுபவித்து
நீயேநிற் றேய்வறவே நின்றமையா—னீயான
செய்தியுனக் கில்லாமை தீரவென துண்மையதாஞ்
‡ செய்திபொருந தொன்றே சிவம். (உ௩௫)

ஒன்று சடசால மொன்றுங் கழியாதே
நின்றபரை தானாகி நில்லாதே—சென்றுசிவத்
தில்லாமை யெய்தாதே யின்பவுரு வாய்நிறைந்து
நில்லாமை தானே நிலை. (உ௩௬)

---

* பெத்தத்தி-பாடபேதம். † மன்மறைப்பின், லுன்மறைப்பின்-பாடபேதம். ‡ செய்திபெறுந்தொண்டே - பாடபேதம்.

உன்னளவில் யானளித்த வுண்மை யுரைக்குங்கா
லின்னபடி யென்றுரைக்க * வெட்டாதே—யென்னேயுன்
போதத்தை நீவளர்த்துப் புத்தகப்பே யாய்நூல்க
ளோதிக் கழியா தொழி. (உ௩௮)

மூலமல மீதென்ற வப்பொழுதே மூத்தனு
மேல வநுபவத்தி லெய்தாம—னூலின்
கதட்டுரைக்கே † நின்றுநீ காலங் கழித்த
லுதட்டடியா மென்றே யுணர். (உ௩௯)

சர்க்கரைதித் திக்குமெனச் சாற்றுமொழி யெப்போதுஞ்
சர்க்கரையிற் றித்தித்த றானுமோ—சொற்கழல
வோயாம லுன்னிலே யுன்னற்று லொன்றுபட
நீபோன வின்பத்தே நில். (உ௩௰)

வாசகமாண் டென்னறிவு மாண்டுநீ யாயொழிந்தா
லீசனே நிற்பெருக்கி லெற்காட்டாய்—பாசச்
சிறையா னதுகழன்ற சிற்சொரூபா வென்ற
‡ னிறைவா மறிவெல்லா நீ. (உ௪௦)

பூதஞ் சுழலும் பொறிபுலனந் தக்கரணம்
போதங் கழித்துநாள் போக்காதே—போதச்
சிறையா நிறைவகலச் சின்மயனே யத்தே
நிறையா நிறைவாகி நில். (உ௪௧)

ஒன்றாகி லொன்றல்ல வொன்றிரண்டே யாகுமது
வென்று விரண்டல்ல வெய்தாவா—நின்று
னிலையுண்டு நில்லாமை நில்லாமை யுண்மை
நிலைநில்லா வந்நிலையா நில். (உ௪௨)

---

* வொட்டாய்கா - ணன்னேயுன் - பாடபேதம். † சென்றுநீ - பாடபேதம். ‡ னிறையா வறிவெல்லா - பாடபேதம்.

எஞ்சா விரண்டாகி லெய்தாவாம் யானருளிற்
றஞ்சாம லொன்றாகிற் றோன்றாவா—மெஞ்சா
திரண்டொன்றே யாகிலரு ளில்லையா முண்மைக்
கிரண்டல்ல வாய்நீ யிரு. (௨௪௩)

விண்கண்டார் மண்கண்டார் விண்ணகலார் மண்ணகலார்
விண்கண்டார் மெய்ஞ்ஞான வித்தகர்தாம்—விண்கண்ட
வந்நிலையே யத்துவித * மாக்கியிடும் போக்கியிடுந்
தன்னறிவின் முற்போதந் தான். (௨௪௪)

நின்றாலும் போனாலு நில்லா நிலைமையுறா
னொன்றா லிரண்டாலு முற்பவியா—னொன்றாலுஞ்
செய்திக் ககப்படான் செய்தியெலா மற்றசிவ
செய்திக்குள் வாழுஞ் சிவன். (௨௪௫)

ஆராலு மெட்டரிய வாதியந்த சூனியத்தி
லோராத வுண்மைப்பே றொன்றலவே—நேராக
வொன்றுமிலைக் கொன்றுமிலை யுண்மையா † லுண்டிரண்டு
மொன்றுமிலா வொன்றான வொன்று. (௨௪௬)

ஒன்று மிரண்டுமற வொன்றற்ற வொன்றாகிச்
சென்றுசிவ மாவார் சிவானந்தர்—மன்றிலுறை
பின்றாழ் சடைமுடியாய் பேரானந் தப்பயனே
யென்றார் பிறவா ரினி. (௨௪௭)

ஒன்று மிரண்டுமற வொன்றிரண்டு தானுமறச்
சென்றுசிவ மாகின்ற செய்தியற—வென்று
மருளான கேள்வியினான் மாணீ யந்தப்
பொருளானே னென்றதெலாம் பொய். (௨௪௮)

* மாகியிடும் போகியிடுந் - பாடபேதம். † லொன்றிரண்டு - பாடபேதம்.

உற்றசிவ மொன்றல்ல வொன்றிரண்டு சென்றதல
பற்றரிய பற்ருய பற்றல்ல—வெற்றவெறும்
போதங் கடந்ததல போதங் கலந்ததல
வீதொன் றிருந்தபடி யென். (உசக)

அப்பொருளே யப்பொருளா மானந்த வுண்மையிலே
யிப்பொருளைத் தேடி யிழவாதே—யப்பா
மருளுதய மாட்சியிலே வாராமல் வந்த
பொருளுதய மிந்தப் பொருள். (உ௫௦)

தாணுவினே டொன்றிரண்டு * தானற்ற தற்பரத்தைக்
காணுநெறி காணுதே காதலித்து—மாணுநீ
பாவுற்ற நூல்களறிப் பாராதே நின்னறிவு
சீவித்த தெல்லாஞ் சிவம். (உ௫க)

மித்தையுடற் கட்டறுத்து மெய்யருளாய் † மெய்யழிக்குந்
தத்துவமுங் கேவலமுஞ் சார்வகற்றிச்—சுத்தத்
தனியாகித் தானும்போய்த் தற்பரமாய் விட்டாற்
செனியா னிதுசத் தியம். (உ௫உ)

நாணுது பின்முன்ணுய் நாளுமிது சத்தியமாய்க்
காணும லின்றளவுங் கண்கலங்கி—வீணே
பெரும்பாவி யாய்ப் ‡ பிறந்து பித்தாணுய் முன்பின்
திரும்பா யிதுசத் தியம். (உ௫ங)

---

* தானுறுதல் - பாடபேதம். † மெய்யொழிக்கும்-பாடபேதம்.
‡ பிறந்த பித்தாபின் முன்ணுய்த் - பாடபேதம்.

* ஒன்று கருவிகழித் தொண்பொருளாய் விட்டேனென்
றின்றளவு நீகத்தி யென்பெற்ற—யுன்றனக்கு
நாணுமை சொல்லக்கே ணன்மகனே சின்மயனைக்
காணுமை யெல்லாங் கரு. (உருச)

சொன்னேறுன் பாழிலே தோன்றுமிறை யென்றதனை
யென்னே மறந்திருணீ யீட்டுவதே—னுன்னையேழ்
வீட்டிலே யீசனுக்கு வீடெனக்கு வீடுவரக்
காட்டலே † யீசாக் கரம். (உருரு)

மந்திரமாய் நீராடன் மானதத்தை வேறக்கல்
வந்தசவு சம்புலன்கண் மாற்றிவிட—லெங்ஙையருட்
காட்சியே மெய்ஞ்ஞானங் காட்சியினிற் கற்பனைகண்
மாட்சியே தற்பா வகம். (உருசா)

நேயத்தழுந்தல்.

ஓடியுழன் றிந்த வுடம்பை யொருதேநீ
பாடிமிடற் றைப்புண் படுத்தாதே—கேடுபிறர்க்
கும்மால் விளையாதே யொன்றுடனுந் தாக்காதே
சும்மாவே காணுஞ் சுகம். (உருஎ)

ஓடாதே தேடாதே யுன்னுதே யோசையெழுப்
பாடாதே ‡ சாத்திரங்கள் பன்னுதே—கேடுபிறர்க்
கும்மாலே செய்யாதே யொன்றுதே யொன்றுமறச்
சும்மா விருக்கை சுகம். (உருஅ)

---

* ஒன்றுங் கருவொழித - பாடபேதம். † யீசர் கரம் - பாட
பேதம். ‡ தோத்திரங்கள் பண்ணுதே - பாடபேதம்.

நீயில்லை நானில்லை யென்றாலு நிற்பிரிவன்
* நீயில்லை நானில்லை நேயத்திற்—றாயசிவ
போதபரி பூரணனே யென்றானின் பூரணம்போ
மேதுசொல்வி வாழ்த்துவே னியான். (உ௫௯)

மந்திரத்தை யோதவே மந்திரமா நின்போதந்
தந்திரத்தைச் செய்குவையேற் றந்திரமாஞ்—சிந்தித்தல்
செய்தலெலா முண்மைச் சிவவிழுப்பா மீங்கிவற்றா
லுய்தலிலை யென்றே யுணர். (உ௬0)

செல்லுதலும் புல்லுதலுந் தேடுதலும் வாடுதலுஞ்
சொல்லுதலுந் தாமறவே தூங்குதலு—மெல்லையறக்
கண்மொய்த்த நீர்க்குறிப்புங் கம்பலையு மத்துவித
வுண்மைக் கிலையென் றுணர். (உ௬௧)

பூசனையும் வாசனையும் புத்தகமுஞ் சாத்திரமும்
† வாசகமா மந்திரமுந் தந்திரமு—நேச
மிறக்கின்ற சிந்தனையு மெல்லாம் பொருளை
மறப்பென்று மாணு மதி. (உ௬உ)

ஆயமுந்த வெல்லாமு மத்துவித மன்றதனு
னீயமுந்த வெல்லா நிலையல்ல—மாய
மருளாகி நில்லாத வாறுபோன் மாணு
வருளாகி நிற்கவேண் டாம். (உ௬௩)

என்புருகி யோலமிடிற் சொல்லுளவா மில்லையெனி
லன்புபெறா வன்பர்க் கயலன்றா—நின்செய்தி
யவ்வாறவ் வாறென் றழியிலழி வுண்டாகு
மெவ்வாறு சொல்வே னியான். (உ௬௪)

---

* நேயமுத வென்றாலும் நிர்பிரிவன் - பாடபேதம். † வாசகமாந் தந்திரமு மந்திரமு - பாடபேதம்.

சொல்லா லுனைத்துதிக்கிற் சொற்போத னாயொழிவ
னில்லா மனப்போத நின்னினையி—லெல்லாமு
நின்செய்தி யென்றுரைக்கி னிற்பிரிவ னிர்க்குணனே
யென்செய்வ துன்பா லியான். (௨௬௫)

உன்னிலுள முற்பவிக்கு மோதிலுளத் தோசையெழு
மென்னழிய யான்முயலில் யானுளனா—நின்னிறைவி
னின்றநிலை யெல்லாமு நீக்கமே யாமாகி
லென்றுணையே யென்செய்வே னியான். (௨௬௬)

உன்னை யறிந்திடவு முன்பாலின் பம்பெறவு
மென்னபிழை நாடினே னென்கோவே—முன்னறிவி
னானென்று னீயில்லை நாடிலது போலநீ
தானென்று னானுளனோ தான். (௨௬௭)

எம்மா னிருந்தபடி யெப்படியோ வென்றார்க்குச்
சும்மா திருப்பதலாற் சொல்லுவதென்—செம்மலர்த்தா
ளன்றுங்கா ணப்பெற்றி லேனடியே னப்பொருளை
யின்றுங்கா ணப்பெற்றி லேன். (௨௬௮)

சொல்லுவான் சுட்டுவான் போனசுகா தீதத்தைச்
சொல்லுவா யென்றாலென் சொல்லுகேன்—புல்லிவிடா
வண்மைக்குஞ் சேய்மைக்கு மப்பாலா மத்துவித
வுண்மைக்கோ ருத்தரமுண் டோ. (௨௬௯)

தந்திரத்தால் வேற்றுருவஞ் சாராதே சார்வுதரு
மந்திரத்தா லுள்ள மறுகாதே—சிந்தித்து
வாங்காதே வையாதே வாராத வாழ்வுவரத்
தூங்கா யதுவே சுகம். (௨௭௦)

தோத்திரமு மந்திரமு மர்ச்சனையுந் தூயநெறிச்
சாத்திரமு முத்தித் தடையென்றாய்—கூர்த்தவருட்
போதவழி விற்பொருளே யானந்த பூரணனே
யேதுசெய்வ துன்பா லியான். (உஎக)

புல்லியபொய்ப் போதமறப் போதானந் தப்பொருளா
மெல்லையிலா வின்பமிலா ரென்செய்வார்—சொல்லக்கே
ளுத்திரங்க நூல்பிதற்றி ஞானம் பறிகொடுத்துச்
சாத்திரங்க ளோதுவதே தான். (உஎஉ)

ஒப்பரிய மெய்ஞ்ஞான வுண்மையிலே மோனமடைந்
தெபபொருளு மாகாதா ரென்செய்வார்—செப்பக்கேள்
சாத்திரங்க ளேபிதற்றித் * தன்முதலை யோட்டுதற்குத்
தோத்திரங்க ளேகத் துவார். (உஎங)

உன்னுதலுக் குன்னுதலாய் நின்றாயை யுன்னுவதெ
னென்னுயிருக் கின்னுயிரா மென்னறிவே—துன்னுசட
மெல்லா மழித்திடுத லென்பரமற் றுன்பரமா
மெல்லா † மழித்திட் டிரு. (உஎச)

காணாத காட்சியல கற்பனைக ளற்றதல
பூணாத பேரின்பப் போதமல—மாணாவிங்
கென்னைநீ யுள்ளபடி கேட்டியா ‡ லெண்ணிறந்த
மன்னுசிவா னந்த மயம். (உஎரு)

தானுவிறே டத்துவிதஞ் சாதிக்கு மாணவனை
யாணவதசோ டத்துவித மாக்கினரார்—கோணறநீ
யென்னுணை யென்னுணே யேகமிரண் டென்னுமை
லென்னுணை சும்மா திரு. (உஎசு)

* தன்முதலி - பாடபேதம். † மிழித்திட் - பாடபேதம்.
‡ லென்னிறந்த - பாடபேதம்.

மையலுறு மாயா மயக்கதனில் வீழ்ந்தழுந்தா
துய்யநெறி மாணாநீ யோதக்கேள்—பொய்யறிவா
மூனநிலைக் குள்ளதுநாற் பேயா யுரைகதற்றல்
ஞானநிலைக் குள்ளதுமோ னம். (உஎஎ)

ஒன்றி யிடுங்கர்ண மெல்லா மொழித்தருளி
னின்றபடி நின்றவனே நேடிக்கே—ஞானறன்
பெறுதிக்கு மென்றன் பெருமைக்கு மொப்பு
நறுநெய்க்குத் தீபம்போ னாடு. (உஎஅ)

காயக் கிலேசமறக் கண்ணாளன் வைத்தநிலை
மாயப் பிறப்பிறப்பு வாராம—னேயத்
தழுந்தாம னில்லாம * லாராத வின்பக்
கொழுந்தாக வைத்தான் குறித்து. (உஎகூ)

சார்வறிவுக் குள்ளே சமாதியடைந் தானுமென
தாருயிரா மீசர்விடா யாருதா—லோருயிராந்
தன்னோய்க்குத் தானே மருந்துபோற் சங்கரனு
மன்னோய்க்கு மன்னே மருந்து. (உஅ0)

நீயறிந்த தெல்லாமு நீடிருளா மாணவங்காண்
பேயறிவு வாழ்ந்ததெல்லாம் பித்தாங்கா—னேயத்
தறிவானந் தப்பொருளை யாரறிந்து காண்பா
ரறிவானை யுண்டுவளர்ந் தால். (உஅக)

எல்லா மிறந்தபே ரின்பமா நின்மேனி
யல்லா லெனதறிவுக் காதாரஞ்—சொல்லாய்நீ
யெவ்வடிவ மானாலும் யானறிவ தவ்வடிவே
யெவ்வடிவும் வேண்டே னியான். (உஅஉ)

* லாராவா லந்தக் - பாடபேதம்.

என்னைநீ யெய்துவதும் யானுன்னை யெய்துவதுந்
தன்னிலற வுன்னையினித் தந்தருளா—யென்னிடத்தில்
* வைத்ததோ டஞ்சிவத்தோ டங்களென்ற கற்பனைக
ளித்தனையும் வாரா திட. (௨௮௩)

சத்த னுகர்போதிற் றன்னறிவு சத்தமதா
மொத்தவிதந் தானான வுண்மைபோ—லத்த
னருளறிவே யாக வநுபவமே தானும்
பொருளதுவே யுண்மைப் பொருள். (௨௮௪)

சொற்பிறப்பும் பாவனையாந் தொல்பிறப்பு † நின்னறிவி
லெற்பிறப்பு ‡ மென்னிறைவி லெல்லையிலா—நிற்பிறப்பும்
போயாவு மின்பபரி பூரணமாய்ப் பூரணம்போய்
நீயான வன்றே நிலை. (௨௮௫)

அன்புருவா மெய்க்குருவே யானந்த பூரணனே
யென்பழைய பொய்ப்போத மென்றகலுந்—துன்பறவென்
றுட்பா னிலைபிழைத்துத் தானே சிவமாகுங்
கோட்பாடு போகப்போ கும். (௨௮௬)

¶ பூதமுதற் றத்துவங்க ளாயவெறும் பொய்களெலா
நேதிசெய்து நின்மலனாய் நின்றிடுதல்—பேதமிலா
நேசத் தழுந்தலிவை யித்தனையு நின்முதலா
மீசற் கிலையென் றிரு. (௨௮௭)

பற்றிலிழுப் பாயகலும் பார்க்கிலிவ னுண்டாகு
முற்றுணரில் வேறாகு மொன்றுமெனின்—முற்றும்
பிறியாப் பொருள்பிறியும் பேசுமுறைக் கெட்டாக்
குறியாக் குறியாங் குறி. (௨௮௮)

---

* கத்திரித்தோ டஞ்சிவத்தோ டங்கமெனுங - பாடபேதம்.
† நினைனிறைவி - பாடபேதம். ‡ மென்னறிவி - பாடபேதம்.
¶ போதமுதற் - பாடபேதம்.

சுகமா னதுகழன்ற சுத்தவெளி யல்லா
லகமாமெண் சித்திகளாம் யாது—* மிகமா
நரலோக போக்கியமு நல்லமிர்த போகப்
பரலோக முஞ்சொப் பனம். (உ௮௯)

பேரானந் தத்தழுத்தும் பேரருட்கை யென்னையுமுன்
னூராத வின்பத் தழுத்தாதோ—சேராதார்க்
குய்யலா முண்மையனே யுன்னைநான் பெற்றழுந்து
மெய்யெலாம் பொய்யாய் விட. (உ௯0)

பாய்ச்சுமிகு மால்விடையோன் பாதுகையைப் பாராதே
பேச்செழுப்பு நூல்கதற்றுற் பேசாதே—காய்ச்சியபால்
தேனமுது கன்னலெனத் தித்தித்தல் செய்யாதே
யானவிழு மின்பா யிரு. (உ௯௧)

ஒன்றுமிலா னென்று னுரையுண் டுணர்வுளதா
மொன்றுமிலா னென்றே யுரையிறக்கி—லொன்றுமிலா
வொன்று மெனிலழிவுண் டுன்னிலையே யென்னிலைமை
மியன்றுலென் † சொல்வே னியான். (உ௯௨)

சிற்சுகமே யன்றிச் சிவகதியி னின்னிலைமை
சற்குருவே யென்னறிவிற் றந்தருளாய்—நிற்கடியா
மாலீ டொழிவுபெற வாழ்வுபெற வானந்த
மேலீடு கைவல் லியம். (உ௯௩)

தம்பிரான் றன்சதுர்க்குச் சான்றுதவ மிக்கோர்க
ளெம்பிரான் சித்திரிப்புக் கென்னுரைக்கேன் - செம்பதத்தே
யான்வாழச் செய்வார்போ லெங்குமா யொன்றுபடத்
தான்வாழ்ந்து விட்டவர் தான். (உ௯௪)

* மிகவா - பாடபேதம். † செய்வே - பாடபேதம்.

மின்னுசிவத் துள்ளே பரைவாழு மற்றதன்பான்
முன்னுசிவம் வாழ்ந்து முழுமுதலாஞ்—சொன்ன
விருவருளும் வாழ்வணியா னெல்லையற வென்பா
லிருவருட்வாழ்ந் தாள்வா ரெனை. (௨௯௫)

தன்னுதயந் தான்படுவ திப்படியே சங்கரனுக்
கென்னறிவிற் றோன்றினா னென்பதன்மு—னென்னே
யுலைவின்றிச் சிற்றாற் றுதிக்கும் பிரமப்
* பிரளயம்போ லாவதே பின். (௨௯௬)

யான்பெற்ற பேறெல்லாம் யானொழிந்து தானாகித்
தான்பெற்று நின்ற சதுர்கேளும்—யான்கெட்ட
வெண்ணிலே யென்னற்றா லென்னறுதி தன்வரவாய்த்
தன்னிலே யெங்குநிறைந் தான். (௨௯௭)

ஆறாறுக் கப்பாலா மானந்த மாக்கடல்தா
னாறாறு நீந்தி யணைந்திடினும்—வேறாகி
யான்முழுகில் வற்றியிடும் யானொன்றுஞ் செய்யாக்காற்
றான்முழுது மேலிடுமே தான். (௨௯௮)

யானுஞ் சிவனு மிரண்டறவே நிற்குநிலை
யீனமில்சீ ரெந்தா யியம்பெனக்கு—ஞானமுதல்
பார்க்குமிவ னேயமிவை பாராம லேரிபுகு
நீர்க்குடம்போ லாங்கா ணிலை. (௨௯௯)

எல்லா மிறந்த விடத்திலே மும்முதலுஞ்
சொல்லாய்நீ யென்றெனக்குச் சொல்லினாய்—மெல்ல
விதமிக்க யானுரைப்பே னென்புதல்வா கேணீ
சதசத்தா மும்முதலுந் தான். (௩௦௦)

---

* பிலையம்போ - பாடபேதம்.

மும்முதலு நித்த மெனமொழிந்தோ முத்தியினு
மம்முறைமை யாமன்றோ வாங்கதுகேள்—மும்மைக்
கழிவின்மை காட்டுங்கா லாராவா னந்த
மொழிவின்மை யேமுதன்மூன் றும். (௩0௧)

இன்பம் பெறலா லுயிரழியா தெப்போது
மென்புருக வானந்த மெய்துதலாற்—றுன்பற்ற
சோதியு ளின்பத் தொலைவின்மை பாசமதா
லோதுமுதன் மூன்று முள. (௩0௨)

மன்னித்த மென்னித்த மென்பதனுன் மாணுகே
ணின்னித்த நீபெறற்கு நீயிலைகா—ணின்னித்த
மெல்லாமு மன்னித்த மென்னிலுனக் கெய்துமா
னில்லா நிலையாகி நில். (௩0௩)

ஆணவமே தாருயிரே தாதிமுத லேதென்று
காணநெடு நூல்விரித்துக் கத்தாதே—மாணுகே
ளென்போதங் * கீழாமிங் கிப்போது சிவனுமா
நின்போத மும்முதலாய் நில். (௩0௪)

வெய்யோன் வரவரவே மெய்ந்நிழலுந் தம்முள்ளே
பைய வொடுங்கும் பகுதிபோ—லைய
னருள்வந் † தணையவே யாணவமாம் போத
மருளுங் கெடும்போ மறித்து. (௩0௫)

பற்றியெழு தற்போதக் கற்பனையும் பாவனையு
மற்றமன வாசகமு மாண்டொழிந்த—வெற்றவெறு
மாராத வின்ப வனுபவத்தே மும்முதலுஞ்
‡ சோராமல் வைக்கத் துசம். (௩0௬)

* கீழா வியங்கியபோ் - பாடபேதம். † தணுகவே - பாடபேதம். ‡ சாராமல் - பாடபேதம்.

தன்முத்தி வாழ்வே தருமருளின் முத்தியருண்
மன்முத்தி யென்ற வகுப்புரைக்கிற்—சின்மயத்தே
தம்மைத் தமக்கறுதி பெற்றோர்கள் சான்றிந்த
மும்மைக்கு மொன்றே முதல். (௩௦௭)

தற்காணி லத்துவிதச் சற்கா ரியத்தவரு
மெற்காணி லத்துவித மென்னுகா—சிற்கோவே
யீங்கிவைதா னின்மையிரு ளாணவமா மெவ்வாறு
பூங்கழலி னேயனிற்கும் போது. (௩௦௮)

பஞ்சாக்கர தரிசனம்.

*ஊர்பயின்றாண் கொல்லுவகைக்குண்மைமலமானதுபோற்
சார்தருநல் லிந்திரியத் தன்னுகர்ச்சி—யாருயிருக்
கெவ்வமற வெப்போது மின்பமதா கச்செய்யும்
நவ்வெழுத்தென் றுள்ளே நவில். (௩௦௯)

கூருமழைக் காரிருளை வாளாக்கிக் கூரிருளா
லாருயிரின் மூலமிழப் பாயிரண்டற்—றோருயிராம்
வெவ்வரவி னஞ்சின் மிகுமயக்கம் போன்மயக்கும்
மவ்வெழுத்தென் றுள்ளே மதி. (௩௧௦)

சொன்னவிரண் டுஞ்செலுத்தித் தோன்றாத் துணையாகித்
துன்னுசட சித்தனைத்துந் தொல்வினைகள்—† முன்னருத்தி
யுய்யுமருள் வீசிவினை யொப்பாக்கி யொப்புருவாஞ்
சிய்யெழுத்தென் றுள்ளே தெளி. (௩௧௧)

---

* ஊர்பயின்றுண் கோலவகை - பாடபேதம். † முன்னிருத்தி - பாடபேதம்.

சாருயிரின் றன்மைவினை தன்மறைப்புத் *தத்துவம்போய்ப்
பேரறிவு பேரின்பம் பிற்றெளித—லாருயிர்க்குத்
தெவ்வழித்தல் பாகமிவை சிந்தித்துள் ளேமுறுகும்
வவ்வெழுத்தென் றுள்ளே மதி. (௩கஉ)

தற்பரமே * தன்னருளாந் தானு வறியாது
வற்றவுட லொத்திட் டவையவையா—முற்செய்வினை
யெவ்வையினுந் தேடுமரு ளெல்லையிலே மீட்சிபெறும்
யவ்வருணத் தின்னியல்பென் றெண். (௩கங)

சிகாரவகார வயிக்கம்.

மூந்தை மனமேறி வாசியிலே மொண்டமிழ்ந்தி
யந்தமிலா வானந்த மானுலும்—வந்ததல
வாராத தன்றுரு மாறு வறுபவத்திற்
சேராமற் சேர்ந்த சிவம். (௩கச)

திருநடன பஞ்சாக்கரம்.

ஓங்கார மீதிலகார வுகார மகாரப்
பாங்காரும் விந்து பரநாத—மீங்கிதன்மேல்
விஞ்சுதுடி வீசுகர மேயமூந்தல் துய்யதழல்
குஞ்சிதத்தா ளஞ்செழுத்தாக் கொள். (௩கரு)

மன்னு மகார வுகார மகாரமிவை
பன்னரிய விந்து பரநாதந்—தன்மிசையில்
நீடுதுடி வாவென்ற னில்லென்ற னல்லவன
லாடுபத மஞ்செழுத்தே யாம். (௩கசு)

---

*-தத்துவம்பொய்ப்-பாடபேதம். † தன்னளவாக-பாடபேதம்.

ஓங்கார மேமுதலா வுற்றபத மைந்தினையு
நீங்கா வதன்மே னிறைந்துநிறைந்—தாங்கறிவைத்
தீர்த்தே சிவமுதலாச் செய்யுஞ் சிவாநந்தக்
கூத்தேயுன் கூத்தாகக் கொள். (௩௧௭)

நவ்வழியு மவ்வழியு நாடாதே நாடறிய
வவ்வழியே யவ்வதனை வாவென்று—செவ்வடியான்
சிய்யென்னு மோரெழுத்திற் சேர்த்திருன் றென்காழி
மெய்யருளும் வள்ளல் விரைந்து. (௩௧௮)

## பஞ்சாக்கரத் திருநடம்.

ஒன்றுதறு மொன்றழைக்கு மொன்றமுத்து மொன்றுசுடு
மொன்றெடுத்துப் பாச மொழிவிக்கு—மன்றிற்
பிறியாத வஞ்செழுத்தாற் பேரின்ப நாடுங்
குறியாத கூத்தின் குணம். (௩௧௯)

உதறி யழைத்தழுத்தி யொண்டீயிற் சுட்டுப்
பதற லறுத்தருளைப் பார்த்து—விதறலற
நின்றுனைக் கண்டறிந்து நீயு மழிந்தறிந்தா
லன்றாம் பிறப்பே மறும். (௩௨0)

சீயென்று நின்றுதறுஞ் செங்கைத் துடிகண்டேன்
வாவென் றழைத்த மலர்கண்டேன்—ஆவியலை
வெற்றகையில் யக்கண்டே னங்கியினில் நக்கண்டே
னற்பதத்தின் மக்கண்டேன் நான். (௩௨௧)

நவ்வென்று நின்றெரியு நல்லவனல் கண்டேன்
மவ்வென் றெடுத்த மலர்கண்டேன்—வெவ்விருள்சீ
யென்ற துடிகண்டே னெனையழைத்த கைகண்டே
னின்றழுத்தும் யக்கண்டே னியான். (௩௨௨)

### சிவாய நலஞ் சொன்னது.

பொற்பொதுவி லாடுமர னஞ்செழுத்தாற் போதத்தைத்
தற்பரத்தே * போயழுந்தச் சாற்றியிடு—னற்பவஞ்செய்
முன்னிரண்டால் விட்டியதிற் பின்னிரண்டால் வேதித்துத்
தன்னிரண்டு முன்னிலைதந் தான். (௩௨௩)

### ஓரெழுத்தி லஞ்செழுத்துநின்றது.

பேறாக வஞ்செழுத்தி னுண்மைபெறும் பெற்றிமையிற்
கூறு மொழியருளாற் கூறுங்கால்—வேறாகா
விந்தகமெய்ப் பேரின்ப வேதகமா மஞ்சுக்கு
முத்தியெழுத் தொன்றே முதல். (௩௨௪)

### அநுபோகம்.

மேலீடு தானொழிதன் மிக்கோங்கி யுண்ணிறைதல்
சால வதிலழுந்தல் தானழிதன்—மூலச்
சிவமாகி யேயிருத்த லஞ்செழுத்தின் செய்தி
பவமாய முத்தியிலே பார். (௩௨௫)

தன்னொழிவு தன்னிறைவு தற்பேறு தானொழிதல்
மன்னு சிவமுதலாய் வாழ்ந்திடுத—லுன்னரிய
வஞ்செழுத்தி னுண்மை யநுபூதி யான்மறைதல்
வஞ்சமற நின்பான் மதி. (௩௨௬)

### திரிபதார்த்தம்.

சிவசிவைதற் போதந் திரோதானம் பாச
மிவையிவையே யஞ்செழுத்தி னெல்லை—சிவமிறந்த
வந்தமிலா வின்பத்தி † லஞ்சுமொளி யாமொழியைத்
தந்தருளா யென்குருநா தா. (௩௨௭)

---

* வைத்தபடி - பாடபேதம். † லஞ்சுமொழி - பாடபேதம்.

## பஞ்சாக்கரவிசிட்டம்.

நெஞ்சா னினைபுநெறி யுண்டாகி னீள்பிறப்பாம்
பஞ்சாக் கரத்தினருள் பாராம—லெஞ்சா
வெழுத்தென்று கொள்ளி லெரிவாய் நரகில்
விழுத்துஞ் சிவனாணை மெய். (௩௨௮)

நாவார வஞ்செழுத்தை யோதினர மென்றுரைத்தி
ரோவாத முத்தரெலா மோதுவதென்—பாவாய்கேள்
சொல்லிறந்த வஞ்செழுத்தைச் சொல்லிறந்த வுண்மையிலே
சொல்லிறந்து நின்றோது வார். (௩௨௯)

## போதானந்த நிருத்தம்.

நின்றுதறி வீசி நிறைந்தா னிறைவொழிந்தா
னென்றுமலா வொன்றாகி யுற்பவித்தான்—முன்றிகழு
மீனமற வென்னறிவி லிப்படியே யெப்போது
ஞானநிலைக் கூத்தாடி னன். (௩௩௦)

குன்றா வனவரதக் கூத்துக்கு வாய்த்தவருண்
மன்று மனவரத மாநடமு—மொன்றுமறச்
சொல்லா லுணராச் சுகாதீத * மெய்விளைவு
மெல்லாமுன் போதத்தி லே. (௩௩௧)

ஒத்தினன் வட்டணிந்தா னுள்புகுந்தா னுள்புகுந்து
மெத்தினன் மித்தையெலாம் வேரறுத்தான்—தித்தித்
தொடாாமன் மெய்ப்பவுரித் தொம்மென்றான் றில்லை
நடராச னாடா நடம். (௩௩௨)

---

* மேவிளையு * பாடபேதம்.

சிட்டார் மணிமன்றிற் றெய்வவரு ணாடகத்தே
தட்டாம லொட்டாமற் றன்னிறைவி—னிட்டையிலே
நின்றநிலை * சுட்டாம னில்லாமற் புல்லாமற்
சென்றுசிவ முற்றார் சிவம். (௩௩)

ஆறாறி னந்தத் தருட்பொதுவா மம்பலத்தே
கூறாத வின்பந் தருங்கூத்தை—வேறாகக்
காணி லிரண்டாகுங் காட்சியறி வொன்றாகுங்
காணிலிரண் டொன்றறவே காண். (௩௪)

† பராதீத நிருத்தம்.

ஞானக்கூத் தன்பாத நண்ணினே னவ்வளவி
லூனக்கூத் தெல்லா மொழிந்தேனே—வானத்
தவராகி யிந்திரனாய் மாலா யயனா
யெவராகி யும்பிறந்த யான். (௩௫)

கற்பனைகள் செற்றிடுமுன் கையிற் றமருகமே
யுற்பவநோ யற்றிடநின் ‡ றோதாதோ—பொற்பொதுவி
னில்லா நிலையருளு நின்கூத்தை யென்னறிவிற்
சொல்லாமற் சொன்னவனே சொல். (௩௬)

செம்மூளரி யுங்கருகுஞ் சின்மயச்செங் கைத்தீயென்
மும்மலமும் வெந்துவிழ மூளாதோ—வெம்மறிவிற்
பின்றாழ் சடையலையப் பேரின்பத் தாண்டவஞ்செய்
மன்றாய் திருவாய் மலர். (௩௭)

---

* கூடாம - பாடபேதம். † வாசனாதீதப்பரமானந்த நிருத்தம்- பாடபேதம். ‡ றோத்தாதோ - பாடபேதம்.

தேசுதிகழ் நின்கரமென் றேசழிக்கும் பொய்யறிவை
வீசியருளே நிறைய வீசாதோ—மாசகற்றுஞ்
சிற்பரனே சின்மயனே சிந்தனைக்கு மெட்டாத
தற்பரனே ஞானக்கூத் தா. (௩௩௮)

ஆராத வின்னமுதே யஞ்சையப்பா வஞ்செழுத்தின்
சாரா நடுநிலைநீ சார்வித்துன்—பேரருளின்
கண்ணாகி நின்னிற் கலந்து * மறைப்போத
நண்ணாமற் செய்வாய் நடம். (௩௩௯)

## அணைந்தோர் தன்மை.

பாலருடன் பித்தன் † பசாச னிலைஞானிக்
கேல வுவமைபல வெண்ணியதென்—மேலுணவு
தேடா திருத்தலாற் றீமைநலஞ் செற்றலா
லாடாது தாணொழிக லால். (௩௪௦)

வாவிநடு விற்றுணு மன்னுதிரை யாலலைவு
மேவியபோற் காட்சிதரு மெய்யன்று—மோவாத
சுத்தன் பிரபஞ்ச வாதனையிற் றோய்ந்தாலு
மத்தன்மை போலே யவன். (௩௪௧)

ஒன்றுபோ னின்றவுல குண்ணுமுபா யத்தையுனக்
கின்றுநா னோதக்கே ளென்புதல்வா—வன்ற
னினைவுக்கு மெட்டாத நின்மலபோ தத்தைக்
கனவுக்குச் சாக்கிரம்போற் காண். (௩௪௨)

---

* மறைப்போடு நமன் - பாடபேதம். † பசாசன சிவஞானிக் - பாடபேதம்.

சாக்கிரத்தே யுற்றவதீ தன்சகல வாதனையிற்
றாக்காமை தாக்கலறத் தான்சரித்தல்—நோக்குங்கால்
மற்றவன்றன் செய்திமது மாந்தியிடு மாந்தரவர்க்
கற்றமுடை யின்மைபோ லாம். (௬௪௩)

பொய்யுதய மெய்யுதயம் பொய்யுதயப் போக்கொழிவின்
மெய்யுதயந் தானே வியாபகமாம்—மெய்யுதயப்
போக்கொழிவே பூரணபோ தானந்தம் பூரணத்திற்
றாக்கொழிவே யின்பவதீ தம். (௬௪௪)

ஆராவா னந்தமய மல்லாது நீயென்றும்
பேராது நாமென்றும் பேர்நிகழி—னோராக
* நெய்க்குற்ற கோதும்பா லாடைதனி னீள்கோதுந்
தக்கிருக்கு நாமுளவேற் றான். (௬௪௫)

மும்மலமு மாய்ப்பார்போன் முற்றுமரு ளாகுவர்பின்
மெய்ம்மையறி வாகாமன் மெய்யுணர்வர்—தம்மை
யறிவாரைப் போலே யறியாரா னந்தம்
பெறுவாரைப் போலே பெறார். (௬௪௬)

காயாதி கண்மயக்கிற் கட்டுண் டசித்தவினை
யோயாமல் வாழா துழன்றலைதல்—மாயா
மருட்போதர்க் குண்டாகும் வாக்குமனந் தீண்டா
வருட்போதர்க் கில்லை யறி. (௬௪௭)

நாலுமறை யந்தத்து நாதாந்த வுண்மையினுஞ்
சிலமிழந் தொன்றாய சிற்பரத்து—மேலொடுகீ
ழெல்லா மிறந்தபரி பூரணத்தும் யானையிலு
நில்லார்கள் மெய்ஞ்ஞானிகள். (௬௪௮)

* நெய்க்குறு கோதுபா லேடுதனி னீள்கோலம் பாடபேதம்.

நீக்காத வுண்மையினி * னிற்பேயை நீமறந்தங்
காக்காத போதாமோ ரற்புதங்கேள்—வாக்குமனந்
தட்டாத தற்பரத்திற் றன்னானை யென்னானை
கிட்டார் சிவயோகி கள். (௩௪௯)

தானுவினைற் றுள்சென்று சார்ந்தவர்கள் தம்பிரா
னானை சிவயோக ராவரெனி—லாணவத்தின்
றட்டாய போதப் பயனாய சுட்டறிவிற்
கிட்டார் சிவயோகிகள். (௩௫௦)

பாவனையொன் றற்ற பராபரத்தைச் சென்றமுந்தி
யோவியமே போலிருந்தார் யோகிகளென்—றியாவையினுந்
தட்டாத வுண்மைத் தனிமுதலை யெஞ்ஞான்றுங்
கிட்டார் சிவயோகிகள். (௩௫௧)

துஞ்சுமுடற் பொய்ம்மயக்கந் தோன்றுதுயர் † தீவளர்த்தோ
விஞ்சுகடல் வாய்ச்சுழியின் வீழ்கலத்தோ—னஞ்சுமிழுந் [ன்
கூராவின் வாய்த்தவளை கொல்புலியின் கைப்பட்டோன்
காரிடமே யூற்றவனேக் கம். (௩௫௨)

தாகமிலை தாகந் தணிக்கின்ற போசனமாம்
போகமிலை சந்தோட புந்தியிலை—மோகமிலை
முக்கால முங்கழன்ற முத்திச் சிவானந்தர்க்
கெக்கால மும்பட் டினி. (௩௫௩)

மல்கா விழியருவி வந்திழியச் சிந்தையவிழ்ந்
தல்கா வனுபோக வற்புதரே—பல்காயந்
துன்றுகறி பாறயிர்செய் சோறுமிகத் துய்த்தாலு
மென்றுமெமக் குப்பட் டினி. (௩௫௪)

---

* னிட்டோசுய - பாடபேதம். † தீவ்ளைத்தோன் - பாடபேதம்.

* தார்க்கட்டில் பூமி தலையணைதோள் † கையணையா
மேற்கட்டி விண்கவரி வீசுங்கா—லேற்று
விளக்கிரவி யிந்து மனைதுறவா மெய்யே
யுளக்கண் விழித்துறங்கு வோர்க்கு. (௧௫௪)

உண்ட வுலகனைத்து முண்ணாத வோருணவா
யுண்டி பிரியாத வுத்தமர்தாந்—தொண்டொழியத்
தம்மறிவு தோன்றியெதிர் சார்வுபெறு வாய்மையெனத்
தம்முதலுக் குண்மறைவர் தாம். (௧௫௫)

ஈறுபடா வின்புறுத லின்பாதல் தற்போத
நாறிலற மாண்டு நடுங்கிடுதல்—பேறொழிதல்
மெய்ப்பொருட்க ணின்றவருள் வித்தகருக் கிங்கிவையாந்
துய்ப்புறக்க ணைம துனம். (௧௫௬)

கூசாம னூலுணர்வாற் கொண்டாடித் தர்க்கித்து
வாசாஞா னங்கதற்றி மாளாதே—தேசிகன்பாற்
‡ றுய்போன்ற வத்துவிதத் தற்பரையை யிப்பிறவிப்
பேய்போக வென்றுகாண் பேன். (௧௫௭)

ஏட்டைப் பிடித்தலறி யேதுக்கள் பற்பலவுங்
காட்டித் தலைதிமிரக் கத்தாதே—கூட்டறுத்த
வாசானே நீதந்த வத்துவித வுண்மையினைப்
பேசாதே யென்றுகாண் பேன். (௧௫௮)

பத்திக் கடல்புரளப் பாயருவி கண்சோரச்
சித்தத் தெளிவுவருஞ் சின்மயகேண்—முத்திக்
குபாயநெறி யானுரைக்கி லொன்றுமற வுன்னைச்
சிவாயநம வென்றே தெளி. (௧௫௯)

---

* காற்கட்டில் - பாடபேதம். † கையிணையா - பாடபேதம்.
‡ றுய்போன -பாடபேதம.

ஏகமிரண்.* டென்னாத வத்துவித வின்பொழியத்
தேகமுத லுற்பவிக்குந் தேகாதி—போகமெலாங்
கான்றசோ றாகியிடக் கண்டுமதன் கண்படுதல்
கான்றசோ றுவதுவே காண். (௩௬0)

பொங்குபுழுக் கூடுதரும் பொய்ப்போதக் கூற்றுவனைச்
சிங்கிகொள வல்லவனே சீமானென்—றங்கவனை
யும்பர்க் கிறைதிருமா லோதியநால் வேதமெலாங்
கும்பிட்டு நின்றுதுதிக் கும். (௩௬௧)

அறிவென் றனையறிந்தா லானந்த போதச்
செறிவும்பொய் யாணவத்திற் சேர்வும்—பிறிவும்பொய்
யாறு விதாகிதத்தி லாட்டுங் கருவினீ
போனாலும் பொய்பொய்பொய் பொய். (௩௬௨)

கண்ணிமைக்கு மந்நேரங் கற்றா முலையிற்பால்
துண்ணெனவீழ் போது † சுகம்வீழ்வோ—ரண்ணலருட்
டாணிழலிற் றாமறவே நின்றிடுவர் தம்பிரா
னாணை பிறவா ரவர். (௩௬௩)

தற்றெளிதல் தன்னழிவு தன்னழிவிற் றன்முதற்கே
யுற்றுருகி யொன்றா ‡ யொழிதலுமாஞ்—சிற்பரத்தே
யுற்றற்றார் போதத்தி னுண்மையனே யாவையினும்
பற்றற்றா ரென்பார் பயன். (௩௬௪)

பற்று மறிவழியப் பார்த்தநிலை பாராத
சிற்பரமா முண்மைச் சிவானுபவத்—துற்றுவளர்
தம்பிரான் றாளடைந்தோர் தாம்பிறவார் தாண்டவஞ்செய்
தம்பிரா னார்சீபா தம். (௩௬௫)

---

* டென்னாத - பாடபேதம். † சுகம்விழைவோ - பாடபேதம்.
‡ யொழிந்தாலுஞ் - பாடபேதம்.

தீதார்ந்த சித்தியினும் யோகத்துஞ் சிற்குணத்து
நாதாந்த முத்தியினு நந்தாதே—வேதாந்த
போதத்தே * தற்போதப் பொய்யொழியப் போகும்பொய்ச்
சாதத்தே பற்றியவச் சம். (௩௬௬)

தன்னைத் தருவோர்க்குத் தானுந் தனைத்தருவ
னென்னைத்தா னென்பார்கட் கேறாதா—னுன்னிற்
புனிதகதி பூரணனே போகியுடன் போகந்
தனிமுதலன் றாதலினாற் றான். (௩௬௭)

## அத்துவிதவுண்மை பஞ்சகிருத்தியம்.

தஞ்சாவூர்த் தட்டா னெனமூலர் சாற்றுநெறி
நெஞ்சா னினைவுற்றே † னின்மலனே—ளெஞ்சாதே
தன்னையழித் தெற்பண்ணித் தன்னி லெனையழித்துத்
தன்னைமிகப் பண்ணுதலாற் றான். (௩௬௮)

உற்றமலர் தன்னூத யூற்றழுந்த லற்றழுந்த
லற்றநிலை போதமிரு ளற்றிருத்தல்—சொற்றதெலாஞ்
சேரப் பொருளாக்கிச் சேட்டித்த லீங்கிவைசங்
காரத்தி லைந்தொழிலே காண். (௩௬௯)

## ஞானபூசை.

காணாதே தீண்டாதே கண்ணாதே யுட்புறம்பு
பேணாதே மந்திரங்கள் பேசாதே—தானுவைநீ
யாக்காதே யானந்த மாகாதே யாகாமை
தாக்காதே வாழ்வதுபூசை. (௩௭௦)

---

* தேர்ந்தப்பேய் போயழியப் - பாடபேதம். † னின்மலர்தா - பாடபேதம்.

ஊட்டுந்தாய் செத்தா லுணர்வா மொருதமையன்
வாட்டமறத் தேட்டமற வந்துதித்தான்—கேட்டருளாய்
நித்தனுநா னுரூச னின்பாத பூசனைக்குச்
சுத்தனோ வல்லனோ சொல். (௩௭௧)

எங்குஞ் சிவமொழிய வில்லையவன் றன்றனை
யங்கந் திரள்கருவி யாணவமாம்—பொங்குமிருண்
மைசெய்த மாமாயை மாயைவினை மற்றனைத்தும்
பொய்பொய்பொய் பொய்பொய்பொய் பொய். (௩௭௨)

உற்றசிவா னந்தமிலாப் பூசை யுயிரில்லா
வெற்றுடலம் பாலற்ற மென்முலையா—முற்றுமிசை
நாதந்தா னற்றயாழ் நற்பொருளில் லாதவுரை
வாசந்தா னில்லா மலர். (௩௭௩)

எங்குஞ் சிவாலயமா மெங்குஞ் சிவமாகு
மெங்குஞ் சிவனடிமை யெங்குமாய்ப்—பங்கறவே
நிற்றல் சிவபூசை நின்றநிலை யாய்நிறைவிற்
பற்றொழிதல் பூசா பலம். (௩௭௪)

என்னொழிய வில்லாத வின்பமுத னீயதுபோ
லுன்னொழிய வில்லாத வொண்பொருணா—னென்னுயிரே
நின்மலவ னாய்நிறைந்து நீயிருப்ப நாயடியேன்
றன்மலவ னாகியவா சொல். (௩௭௫)

சீரார் பதினெண் புராணஞ் செழுமறைநூ
லாராத வாகமங்கற் றுய்ந்தறிந்தும்—நேராகச்
சங்கரன் றாளிணைக்கீ ழன்பிலனேற் சண்டாள
னங்கையினிற் பாகீ ரதி. (௩௭௬)

சச்சிதா னந்தத் தனிமுதலாந் தன்முதல்பால்
அர்ச்சியா வர்ச்சனையை யாதிகுரு—வுற்பவித்தே
கொட்புறுபொய்ப் போதமறக் கூறியபின் * வேறுதரு
முட்புறம்பா மர்ச்சனையற் றேம். (௬எஎ)

மாறு வலக்கரத்தாற் பூசிக்கின் மாநரக
மேறு நரக மிடக்கரத்தாற்—கூறுத
வஞ்செழுத்தை நாவா லறைகுவையே யாமாகில்
விஞ்சுபிறப் பேழாய் விடும். (௬எஅ)

சைவசித்தாந்தம்.

ஏகமல வென்று மிரண்டன் றிரண்டற்ற
போகமல பூரணமாம் போதமல—தேகாதி
போகமே பொய்யாய்ப் பொருண்மேற் பரிபாகத்
தாகமே சைவசித்தாந் தம். (௬எகூ)

ஆதிமுத்தன் செய்தவரு ளற்புதத்தை யென்னுரைக்கேன்
போதமற வென்னுட் புகுந்தருளால்—வேதகஞ்செ
யத்துவிதி நானலனீ யானந்தி யாதலினு
லத்துவிதி நீயேயென் றான். (௬அ௦)

ஏகமிலா வத்துவித மென்னொழிவி லெய்தாமன்
மாகமுதற் றத்துவங்கண் மாய்வித்து—மோகமிகு
மெய்யொழித்து மெய்யுணர்வை மெய்யுணர்வால் வேதித்துப்
பொய்யொழித்துப் போக்கினேன் போது. (௬அக)

அறிவு தொழிலொத்தா லஞ்சிலைந்தா லாகுஞ்
செறிவுசிவ தத்துவமாய்ச் சேர்ந்தோன்—பிறிவின்றுஞ்
சுத்தமிவை யைந்துக்கு மப்பாலாந் தூயோனு
மத்துவிதா னந்தனு வான். (௬அஉ)

---

* பேறுதரு - பாடபேதம்.

அத்தனுட னென்றிரண்ட தாகா திரண்டற்ற
வத்துவித மேதென்று யாங்கதுகேள்—சுத்தக்
கதிரிரவி சேரரவுங் காரிருளைக் காயு
மதியரவும் போலே மதி. (௩அ௩)

* துன்னுமல போதத் துரிசறவே யத்துவித
வுன்றுதனுன் பானுடனே யுற்பவிக்குந்—தன்மைசொலிற்
காட்டமறை செந்தீக் கடைகாலை வெம்மையைப்பின்
கூட்டியெழல் போலே குறி. (௩அ௪)

கைம்மாறு.

தன்னடிமை முன்னாக்கிச் சற்புத் திரனாக்கி
மன்னுமுயிர்த் தோழனுமா மாறளித்துப்—பின்னையிவை
யித்தனையும் † வேறாக்கி யானீயே யாமென்னு
மத்தனுக்குக் கைம்மா றது. (௩அ௫)

தானிருந்த தன்மையெலா மியானென்ற சங்கரனுக்
கியானிருந்த தன்மை யிழப்பதலால்—யானேதுங்
கைம்மாறு கண்டிலேன் கற்பனைக ளற்றானுக்
கெம்மால் வழிபா டிது. (௩அ௬)

வாராமல் வந்தவர்க்கென் மாட்சியிலே காட்சியறத்
தாராம லுள்ளபடி தந்தவர்க்குத்—தீர
வடிப்பதுமஞ் சென்னிமிசை யாக்கினர்க்குத் தன்னைக்
கொடுப்பதுகைம் மாறதுவா கும். (௩அ௭)

---

* தன்மலபொய்ப் - பாடபேதம். † பொய்யாக்கி யானீகா னென்று - பாடபேதம்.

தன்னிலையே தன்னைப் பெறுதியெனத் தாளளித்திட்
டென்னை யறவொழித்திட் டெல்லையிலாத்—தன்னிறைவு
தானாகப் பேரின்பந் தந்தவர்க்குக் கைம்மாறிங்
கானாத வின்பொழிவே யாம். (ருஅஅ)

மாட்சிதரு மன்னுசிவ கேவலத்தின் வாய்மையைநின்
றாட்கமலந் தாரகமாய்த் தாருருவே—காட்சிமுத
லெல்லாமும் போயிறந்த வின்பாதீ தத்தொன்று
மில்லாமை கைவல் லியம். (ருஅகூ)

சார்வறிதல் சார்வொழிதல் தன்னறிதல் தற்பேறு
பேரறிவு நேயம் பெருகுநிலை—யாருயிருக்
குய்வந்த வின்புறுத லோரெட்டு மாயையாம்
பொய்வந் துறப்பறந்து போம். (ருகூ0)

என்னழிய நின்றாடு மின்பநடம் வல்லானுக்
கென்னொழிவே யம்பலமா மென்முதலுக்—குன்னரிய
வேத்துக் கெழுத்தஞ்சு மானே யிறவாத
கூத்துக்கென் போக்கே கொடை. (ரு.கூக)

## குருலிங்க சங்கமம்.

காட்டு மருளெல்லாங் காட்டுங் குருவாகுந்
தேட்டமிலா வின்பஞ் சிவலிங்க—மீட்டியபே
ரானந்த மொன்றுக்கொன் றேவ்வாமை யாகுமது
தானந்த மெய்வேடந் தான். (ருகூஉ)

## நெஞ்சிற்கமைவுரை.

உப்பகன்ற நீர்க்கூழு முண்டாற் பசிகெடுமா
லப்பதுண்டு கூவல்குள மாறதனி—* லிப்படியைப்
பார்த்தமையாய் நெஞ்சே பரந்தெழுந்து சென்றாலும்
போர்த்துளதின் மேல்வருமோ † பேசு. (௩௯௩)

பல்காய நற்கறியும் பானெய்பழத் தோடடிசில்
செல்வாய தேயஞ் செறிந்தாலு—‡ மெல்லவுனை
யூட்டாவூ முண்டே லுறுபிணிமற் றியாதொன்றால்
வீட்டாதோ நெஞ்சே விரைந்து. (௩௯௪)

நல்ல வறுசுவையு நாவினுனி மாத்திரமே
யெல்லை யிருவிரலே யல்லதிலை—மெல்ல
விருவிரலைத் தான்கடக்க மாட்டாதே நெஞ்சே
பொருகடலைத் தான்கடப்பாய் போய். (௩௯௫)

ஆடை யழகினைநன் காதரித்தே யாங்கதற்கென்
றோடி யுறுபொருளுக் குற்றழன்றாய்—கூடியதேல்
வண்ணா னொலிமருவா ¶ வைப்பிடமற் றின்னவற்றா
லெண்ணாயே நெஞ்சே யிடர். (௩௯௬)

கந்தையொடு வெண்ணீறு கன்முழைபாழ்ங் கோயில்பல
முந்தையுள சீத முறுமென்னில்—வெந்துயரக்
கோடையினிற் கோவணமுங் கூடமிகை யித்தனைகா
ணாடையினிற் காரியந்தா னாங்கு. (௩௯௭)

---

* லிப்படியே - பாடபேதம். † பேறு - பாடபேதம். ‡ மொல்லை வினை - பாடபேதம். ¶ வைப்பிடத்திற் கேடதனை - பாடபேதம்.

நீயா யமையாய் நினைந்தோடிக் கிட்டாமை
*யேயா வமைந்தா யிடர்நெஞ்சே—† காயோ
கடையானார் காய்பசிக்கே கால்குலைவர் கற்றோ
ரடையாரோ வாங்கமையின் பால். (௩௯௮)

அமையாதே பெற்றதனா லாங்காங்கு நன்றென்
றிமையா தெழுந்தோடு கின்றாய்—சமையாச்
சிறுமைக்கு வித்ததுவாந் தேறாய் மனனே
மறுமைக் கஃதே மறைப்பு. (௩௯௯)

ஆற்றங் கரைப்பசுத்தா னக்கரையோ டிக்கரையிற்
றோற்றும் ‡ பசும்புற் றொடர்வுறுமே—யாற்ற
வதுவேபோ னெஞ்சே யலைந்தலைப்பட் டோடு
மிதுவே யுனக்கிதனாற் பேறு. (௪௦௦)

இருந்தவிடத் தேதும்வரக் கண்டிருப்ப தன்றோ
பெருந்தகைமைக் காபரணம் பேதாய்—மருந்தெனவே
யாங்கினியார் தங்கடையிற் சென்றிடினங் காதரியார்
பாங்கிதுகாண் பாழ்நெஞ்சே பார். (௪௦௧)

உணர்ந்தார்க் குடம்புபகை யென்றே ¶ யுலக
முணர்ந்தா ருணர்ந்தே யுரைத்தார்—நினைந்தாம்
பொருண்முழுதும் விட்டாலும் பொய்யுடம்பிற் காதன்
மருளதுவா நெஞ்சே மறித்து. (௪௦௨)

---

* யோயாமை யாயா யுயர்நெஞ்சே - பாடபேதம். † சாயோர் - பாடபேதம். ‡ பொசிப்பை - பாடபேதம். ¶ யுடல - பாடபேதம்.

இல்லாத தில்லை யுளதுதவி ராதென்று
நல்லார் துணிபொருளை நாடுங்கா—லெல்லா
மமைத்தபடி யேவருமா * லாங்கசைவென் னெஞ்சே
சமைத்தபொரு டாமறிவார் தாம். (௬௦௩)

இங்கேதன் னுயிரை யேதமறக் கண்டவிடத்
தங்கே யெலாமமைய லாயிருக்க—வெங்கேனுங்
காடு மலையுங் கடந்துடம்புக் காவருந்தி
யோடுவதே னெஞ்சே யுரை. (௬௦௪)

அமைதற் குபாய மறிந்திடநீ வேண்டிற்
கமையுற்ற ஞானக் கரும்பைத்—தமையுற்ற
வாரியர்பாற் பெற்றங் கவரடிக்கே யேவலினை
யோரியல்பாய்ச் செய்நெஞ்சே யுற்று. (௬௦௫)

நீடுங் தலைகீழ்கால் மேலாக நின்றாலுங்
கூடும் படியன்றிக் கூடாதா—லோடி
வருந்தாம லுள்ளபடி வந்திடக்கண் டாறி
யிருந்தாலோ நெஞ்சே யினி. (௬௦௬)

நல்லாரை மேவி நலங்கிடக்க வங்குள்ள
பொல்லாங்கு கொண்டாடிப் போகாதே—யெல்லா
மருளியவா செய்தங் கலதொழிநீ நெஞ்சே
பொருளியல்வே றில்லையினிப் போற்று. (௬௦௭)

வையுதலும் வாழ்த்துதலும் வார்த்தையினிற் † கற்பித்து
வையுமது நெஞ்சே நலமன்று—லெய்தும்
புரையிடத்து வாயுப் புரைக்குமொலி யென்றே
யுரையிடத்துக் கோளொழிநீ யுற்று. (௬௦௮)

---

* லாங்கமைக - பாடபேதம். † நர்க்கித்து - பாடபேதம்.

ஒன்பதுவா யாலே மலஞ்சொரியு மூத்தைகமழ்
புன்புலையங் குற்ற புழுவுடம்பை—யன்புடனே
யேத்துவார் வைவா ரிழிவுரைப்பா ரல்லாதா
ராத்தமா மெய்யுணர்வார்க் காங்கு. (௪௦௯)

வாயுவன னீர்பிணிதான் மற்றும் பலபலவா
மாயசட வேதுவினு லாம்பயனுக்—கேயவொரு
செற்றநலங் கொண்டிலையே சேதனவே துத்தனையு
மற்றவணா நெஞ்சே மதி. (௪௧௦)

ஆர்வமொடு செற்றத்தை யாரிடத்துங் கொள்ளாதே
சாரமுள்ள தெவ்விடத்துந் தான்கொண்டு—தீரவுணர்
நல்லோர்தஞ் சொல்லை நழுவாம னன்னெஞ்சே
நில்லா யிதுவே நிலை. (௪௧௧)

பெற்றதுவே கொண்டமைந்து பேரிழவுக் கொல்காதே
குற்றநல மென்கோள் குறுகாதே—மற்றும்
பயனின் மொழியாதே பார்த்துளமே நல்லோர்
நயமுமற வாதே நட. (௪௧௨)

பொய்க்கனவும் பொய்த்தேரும் போலுமுடற் போமளவுஞ்
சிக்கெனவே நாதன் றிருவடியை—நெக்குருகிப்
பூண்டுவிடா தேகிடந்து போற்றியிடு நெஞ்சேநீ
மீண்டுபிற வாதே விட. (௪௧௩)

ஆண்ட வியல்பை நினைந்தே யதிலுருகி
வேண்டிமிக மெய்யன்பை மேன்மேலு—மீண்ட
வழியாதே பூண்டமைமொ மாரமுதை நெஞ்சே
யொழிவறவே நீயுண் டிரு. (௪௧௪)

சிவானந்தமாலை முற்றும்.

கடவுள்துணை.

சிவானந்தமாலையின்

# செய்யுள் முதற்குறிப்பகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| அ. | |
| அங்கமுதல் | 28 |
| அஞ்சுவிர | 11 |
| அத்தனுட | 69 |
| அத்துவித | 19 |
| அந்தமிலா | 15 |
| அப்பாலே | 17 |
| அப்பொரு | 45 |
| அமைதற் | 73 |
| அமையா | 72 |
| அறியாவறி | 17 |
| அறிவுதொ | 68 |
| அறிவென் | 65 |
| அன்புடைய | 41 |
| அன்புரு | 51 |
| ஆ. | |
| ஆகாரசித் | 26 |
| ஆகாரமே | 25 |
| ஆக்குநக | 11 |
| ஆக்கைதரு | 40 |
| ஆடுகுலா | 23 |
| ஆடை | 71 |
| ஆணவமேயுன் | 14 |
| ஆணவமேதா | 54 |
| ஆண்ட | 74 |
| ஆதியம | 23 |
| ஆதிமுத்தன் | 68 |
| ஆயமுந்த | 47 |
| ஆராத | 61 |
| ஆராலு | 44 |
| ஆராவா | 62 |
| ஆர்வமொழி | 74 |
| ஆலிதனக் | 33 |
| ஆனன்றவ | 20 |
| ஆரூறி | 60 |
| ஆரூறக் | 53 |
| ஆற்றங் | 72 |
| ஆறைத | 9 |
| இ. | |
| இக்கேதன் | 73 |
| இந்சா | 4 |
| இந்திர | 39 |
| இருந்த | 72 |
| இருவகை | 16 |
| இல்லாதில் | 73 |
| இன்பத்து | 34 |
| இன்பம் | 54 |
| ஈ. | |
| ஈசனிரு | 1 |
| ஈட்டமில் | 20 |
| ஈதல்ல | 18 |
| ஈறுபடா | 64 |
| ஈறுமுத | 9 |
| உ. | |
| உச்சியாய் | 11 |
| உடம்பு | 37 |
| உணர்ந்தார் | 72 |
| உண்டவுல | 64 |
| உதறியமை | 57 |
| உப்பகன்ற | 71 |
| உருவிளக்கும் | 40 |
| உற்பவித்த | 30 |
| உற்றசிவ | 45 |
| உற்றசிலா | 67 |
| உற்றமல | 66 |
| உற்றூர்போ | 33 |
| உன்மதத | 35 |
| உன்றன்மை | 22 |
| உன்னருளை | 27 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| உன்னலுரை | 36 |
| உன்னளவில் | 43 |
| உன்னிலுள | 48 |
| உன்னுதலு | 49 |
| உன்னுமன | 33 |
| உன்னையழித் | 31 |
| உன்னையறிந் | 48 |
| **ஊ.** | |
| ஊட்டுந் | 67 |
| ஊனுமுரை | 34 |
| ஊனுறக்க | 30 |
| ஊர்பயின் | 55 |
| **எ.** | |
| எங்குஞ்சிவ | 67 |
| எங்குஞ்சிவா | 67 |
| எஞ்சாவிரண் | 44 |
| எந்தவுரு | 39 |
| எப்பொருளுந்தா | 18 |
| எப்பொருளுமா | 24 |
| எம்மானிரு | 48 |
| எய்ப்பதனி | 26 |
| எல்லாநூல் | 29 |
| எல்லாமிறந்தபே | 50 |
| எல்லாமிறந்தவிட | 53 |
| எல்லாமிறநதவிட | 30 |
| எல்லையற | 17 |
| எல்லையறு | 18 |
| எல்லையிட | 18 |
| என்குறை | 19 |
| என்புருகி | 47 |
| என்றும்பெறு | 39 |
| என்னழிய | 70 |
| என்னிலையே | 40 |
| என்னுயிரி | 40 |
| என்னைநீ | 51 |
| என்னைப் | 28 |
| என்னைமற | 38 |
| என்றொழிய | 67 |
| **ஏ.** | |
| ஏகமல | 68 |
| ஏகமிரண் | 65 |
| ஏகமிலா | 68 |
| ஏட்டைப் | 64 |
| ஏதமுறு | 2 |
| ஏதுக்கு | 34 |
| ஏதுதரு | 31 |
| ஏதுநீ | 21 |
| ஏதுள | 35 |
| ஏதேது | 37 |
| **ஐ.** | |
| ஐயிறைக் | 16 |
| ஐவகை | 24 |
| **ஒ.** | |
| ஒக்கவுயி | 25 |
| ஒத்திருன் | 59 |
| ஒப்பரிய | 49 |
| ஒன்பது | 74 |
| ஒன்றாக | 41 |
| ஒன்றாகி | 43 |
| ஒன்றியி | 50 |
| ஒன்றிலதீ | 7 |
| ஒன்றுகரு | 46 |
| ஒன்றுசட | 42 |
| ஒன்றுதறு | 57 |
| ஒன்றுபோ | 61 |
| ஒன்றுமறநின் | 8 |
| ஒன்றுமறநீ | 26 |
| ஒன்று-திரண் | 44 |
| ஒன்று-றற்ற | 44 |
| ஒன்றுமிலாவொ | 20 |
| ஒன்றுமிலானெ | 52 |
| **ஓ.** | |
| ஓங்காரபீட | 5 |
| ஓங்காரமீ | 56 |
| ஓங்காரமே | 57 |
| ஓடாதே | 46 |
| ஓடியுழன் | 46 |
| ஓதப்புக் | 26 |
| ஓய மலை | 23 |
| ஓரிக்கு | 35 |
| **க.** | |
| கட்டறு | 31 |
| கண்டவடி | 22 |
| கண்டா | 12 |
| கண்டுருகி | 29 |
| கண்ணாய் | 11 |
| கண்ணுடி | 15 |
| கண்ணிமைக்கு | 65 |
| கந்தையொடு | 71 |
| கருவாயுத | 16 |
| கருவிகொடு | 23 |
| கற்பனைகள் | 60 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| **கா.** | |
| காட்டங் | 30 |
| காட்டுமரு | 70 |
| காணாத | 49 |
| காணாதே | 66 |
| காணாநிலை | 34 |
| சாணவொணா | 13 |
| காயக்கிலேச | 50 |
| காயமெனி | 17 |
| காயாதிகக் | 36 |
| காயாதிகண் | 62 |
| காலநியதி | 6 |
| காலைதொழ | 4 |
| **கி.** | |
| கிரியைகேள் | 4 |
| **கு.** | |
| குன்றுவன | 59 |
| **கூ.** | |
| கூசாம | 64 |
| கூடாத | 42 |
| கூரிருளூ | 28 |
| கூருமழை | 55 |
| கூலிப் | 9 |
| **கெ.** | |
| கெட்டவிரு | 32 |
| **கை.** | |
| கையறியா | 3 |
| கையறியா | 38 |
| கையாகி | 28 |
| **கொ.** | |
| கொண்டாட்டு | 9 |
| **ச.** | |
| சச்சிதான | 68 |
| சத்தநுகர் | 51 |
| சரியைகே | 4 |
| சர்க்கரை | 43 |
| **சா.** | |
| சாக்கிரத்தேநிற் | 6 |
| சாக்கிரத்தேயு | 62 |
| சாதத்தின் | 15 |
| சாருயிரி | 56 |
| சார்வறித | 70 |
| சார்வறிவுபோ | 19 |
| சார்வறிவுக் | 50 |
| **சி.** | |
| சிட்டார் | 60 |
| சித்தவிக | 34 |
| சிவசிவை | 58 |
| சிற்சுகி | 52 |
| சின்மய | 10 |
| **சீ.** | |
| சீதமுடன் | 16 |
| சீயென்று | 57 |
| சீரார்பதி | 67 |
| சீலமழிந | 22 |
| **சு.** | |
| சுகமான | 52 |
| சுட்டற்ற | 21 |
| சுட்டியதோ | 1 |
| சுத்தஞ் | 6 |
| சும்மா | 1 |
| **செ.** | |
| செம்முளரி | 60 |
| செய்தநெல் | 26 |
| செல்லாதே | 21 |
| செல்லாமற் | 20 |
| செல்லுதலும் | 47 |
| சென்றசல | 19 |
| சென்றநிலை | 37 |
| **சே.** | |
| சேமலிப்பா | 10 |
| **சொ.** | |
| சொல்லா | 48 |
| சொல்லுவா | 48 |
| சொற்கோவுந் | 2 |
| சொற்பிறப்பு | 51 |
| சொன்னவிர | 55 |
| சொன்னோமுன் | 46 |
| **சோ.** | |
| சோரா | 15 |
| **ஞா.** | |
| ஞானக்கூத் | 60 |
| ஞானங்கேள் | 5 |
| ஞானநிகழ் | 33 |
| ஞானமுத | 13 |
| **த.** | |
| தஞ்சாவூர்த் | 66 |
| தந்திரத்தால் | 48 |
| தந்தைதமர் | 37 |
| தம்பிரான் | 52 |
| தற்காணி | 55 |
| தற்காண்டல் | 7 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| தற்கேள்வி | 32 |
| தற்பரமுன் | 27 |
| தற்பரமே | 56 |
| தற்போதமி | 10 |
| தற்போதம் | 15 |
| தற்றெளிதல் | 65 |
| தன்குழவி | 5 |
| தன்முதலிற் | 31 |
| தன்முத்தி | 55 |
| தன்னடிமை | 69 |
| தன்னிலையே | 70 |
| தன்னிறை | 14 |
| தன்னிற்றனி | 31 |
| தன்னுண்மை | 3 |
| தன்னுதயங் | 53 |
| தன்னுலகு | 32 |
| தன்னைத்தரு | 66 |
| தன்னொழிவு | 58 |
| **தா.** | |
| தாகமிலை | 63 |
| தாணுவினற் | 63 |
| தாணுவினோடத் | 49 |
| தாணுவினோடொடா | 45 |
| தார்க்கட்டில் | 64 |
| தாவா | 37 |
| தானாகி | 9 |
| தானிருந்த | 69 |
| தானுந்த | 27 |
| தானென | 42 |
| தான்சென் | 19 |
| **தி.** | |
| திண்ணிய | 8 |
| திரையிலா | 35 |
| **தீ.** | |
| தீதார்ந்த | 66 |
| தீப்போ | 32 |
| **து.** | |
| துஞ்சுமுட | 63 |
| துன்பமய | 29 |
| துன்னுமல | 69 |
| **தே.** | |
| தேசுதிகழ் | 61 |
| **தோ.** | |
| தோத்திரமு | 49 |
| **ந.** | |
| நண்ணுங் | 10 |
| நம்மையு | 41 |
| நல்லவறு | 71 |
| நல்லாரை | 73 |
| நல்லுணர் | 8 |
| நவ்வழியு | 57 |
| நவ்வென்று | 57 |
| நற்குல | 4 |
| நன்றுமிரு | 24 |
| **நா.** | |
| நாணாது | 45 |
| நாதனிரு | 23 |
| நாலாய | 22 |
| நாலுமறை | 62 |
| நாலுவகை | 8 |
| நாவார | 59 |
| **நி.** | |
| நின்செய | 42 |
| நின்மலனீ | 25 |
| நின்றவிரு | 7 |
| நின்றநிலைபோர | 17 |
| நின்றநிலையே | 22 |
| நின்றநிலையே | 40 |
| நின்றாலும் | 44 |
| நின்னாதறி | 59 |
| நின்னறிதல் | 38 |
| நின்னறிவு | 35 |
| **நீ.** | |
| நீக்காத | 63 |
| நீசிவமா | 22 |
| நீடுசிவ | 28 |
| நீடுந்தலை | 73 |
| நீயறிந்த | 50 |
| நீயற்றா | 18 |
| நீயாயமை | 72 |
| நீயிருக்க | 4 |
| நீயில்லை | 47 |
| நீயின்மை | 39 |
| நீயுஞ்சி | 14 |
| நீயெடுத்த | 27 |
| நீயேயெல் | 42 |
| **நெ.** | |
| நெஞ்சாளினை | 59 |
| **நே.** | |
| நேயத்தே | 2 |
| **ப.** | |
| பத்திக்கடல் | 64 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| பரமனிவ | 12 |
| பருந்து | 14 |
| பறையழிய | 20 |
| பல்காய | 71 |
| பற்றியெழு | 64 |
| பற்றிலிழுப் | 51 |
| பற்றமறி | 65 |
| பா. | |
| பாசஞ்சி | 4 |
| பாசம்பகை | 37 |
| பாய்ச்சு | 52 |
| பாலருடன் | 61 |
| பாவனை | 63 |
| பாழ்தத | 26 |
| பீ. | |
| பீடுதரு | 1 |
| பு. | |
| புல்லிய | 49 |
| புன்னூல் | 3 |
| பூ. | |
| பூசனையு | 47 |
| பூணுமழ | 11 |
| பூதஞ்சுழ | 43 |
| பூதமுதற் | 51 |
| பெ. | |
| பெத்தமுத்தி | 31 |
| பெற்றது | 74 |
| பே. | |
| பேசும்பரி | 8 |
| பேரும்பில | 17 |
| பேரானந்த | 52 |
| பேருக | 58 |
| பொ. | |
| பொங்குபுழு | 65 |
| பொய்க்கனவு | 74 |
| பொய்க்குடிலை | 16 |
| பொய்ப்போத | 38 |
| பொய்யறிவு | 35 |
| பொய்யா | 15 |
| பொய்யுதய | 62 |
| பொய்யுறை | 3 |
| பொய்விளக் | 25 |
| பொற்பொது | 58 |
| போ. | |
| போதந்தன | 7 |
| போதானந் | 41 |
| ம. | |
| மக்களொடு | 16 |
| மந்தரா | 9 |
| மந்திரத்தை | 47 |
| மந்திரப்பேய் | 12 |
| மந்திரமாய் | 46 |
| மல்காவிழி | 63 |
| மண்மறப்பி | 42 |
| மன்றுணட | 2 |
| மன்னித்த | 54 |
| மன்னுகரண | 38 |
| மன்னுசிவ | 53 |
| மன்னுபறை | 24 |
| மன்னுமகா | 56 |
| மா. | |
| மாசிலா | 18 |
| மாசுமலி | 25 |
| மாட்சிதரு | 70 |
| மாயாவுரு | 27 |
| மாயை | 14 |
| மாலிட் | 14 |
| மாறுவல | 68 |
| மானுதமே | 34 |
| மி. | |
| மித்தையுட | 45 |
| மு. | |
| முத்திக்கனி | 21 |
| முத்திபெற | 12 |
| முந்தைமன | 56 |
| மும்மலத் | 13 |
| மும்மலமு | 62 |
| மும்முதனு | 54 |
| முன்னமல | 20 |
| மூ. | |
| மூடிப்பார் | 40 |
| மூலமல | 43 |
| மூலமுட | 7 |
| மூவலியு | 22 |
| மெ. | |
| மெத்தவிழி | 39 |
| மெய்ஞ்ஞான | 5 |
| மெய்போ | 3 |
| மே. | |
| மேலாய | 39 |
| மேலீடு | 58 |
| மேவுபடி | 36 |
| மேவுபுறக் | 24 |

# செய்யுள் முதற்குறிப்பகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| மேனிபுளகா | 3 |
| மேனிபுளகி | 36 |
| மை. | |
| மையலிலா | 29 |
| மையலுறு | 50 |
| யா. | |
| யாவர்க்கு | 13 |
| யானறியா | 6 |
| யானுஞ் | 53 |
| யானுந்தா | 27 |
| யான்பெற்ற | 53 |
| யோ. | |
| யோகங்கே | 5 |
| வ. | |
| வளையாய் | 11 |
| வா. | |
| வாக்கா | 12 |
| வாசகமா | 43 |
| வாயுவன | 74 |
| வாயைப்புண் | 30 |
| வாராதுவக் | 10 |
| வாராமல் | 69 |
| வாராயறிவுடை | 19 |
| வாராய்மன | 33 |
| வார்த்தையற | 30 |
| வாவிநடு | 61 |
| வாளாகின் | 36 |
| வாளாமருட் | 10 |
| வி. | |
| விஞ்ஞகலர் | 13 |
| விடுதிரிலை | 13 |
| விண்கண்டார் | 44 |
| விரிந்தசுத் | 6 |
| வில்லார் | 29 |
| வீ. | |
| வீடொழிய | 28 |
| வெ. | |
| வெண்ணெயுறு | 23 |
| வெய்யோ ஈ | 21 |
| வெய்யோன் | 54 |
| வே. | |
| வேறுய | 21 |
| வேறுபடா | 2 |
| வை. | |
| வையுதலும் | 73 |


செய்யுள் முதற்குறிப்பகராதி

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்

# சிவானந்தமாலை

இஃது

S. அனவரதவிநாயகம் பிள்ளை, M. A., L. T.,

அவர்களால் பரிசோதிக்கப்பட்டு,

சென்னை :

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1910

Copyright] விலை அணா 1 [Registered.